முனைவர் இரா. திருமுருகன்



# எருமைத் தமிழர்கள்

# எருமைத் தமிழர்கள்!

முனைவர் இரா. திருமுருகன்

'ஏழிசைச் சூழல்'
62, மறைமலைஅடிகள் சாலை
புதுச்சேரி—605 001.

இரண்டாம் பதிப்பு : சூன் 2001
உரிமை: ஆசிரியர்க்கு
பக்கம் : 80

**விலை : உருபா 25.00**

கிடைக்குமிடம் :
சு. அறவாழி அறி.மு. மெய்.மு.
'ஏழிசைச் சூழல்'
62, மறைமலை அடிகள் சாலை
புதுச்சேரி – 605 001

ஒளியச்சு : பாவலர் பண்ணை
60, மறைமலை அடிகள் சாலை
புதுச்சேரி – 605 001

அச்சிட்டோர் : அன்னை அருள் மறுதோன்றி அச்சகம்,
தியாகராாசர் தெரு,
புதுச்சேரி – 1.

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ஒரு சொல் கேளீர்! | 4 |
| 1. தமிழன் தமிழன் ஆவானா? | 7 |
| 2. தமிழன் தமிழில் ஒப்பமிடுகின்றானா? | 15 |
| 3. தமிழுக்குத்தக்க இடம் எப்போது? எப்படி? | 21 |
| 4. தமிழைக் கொல்லும் தனியார் தொலைக்காட்சிகள் | 25 |
| 5. விடுதலைக்குப்பின் தமிழின் நிலை | 33 |
| 6. தமிழ் நெஞ்சங்களின் குற்றம்! | 37 |
| 7. இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ் இருக்குமா? | 43 |
| 8. தார் பூசும் போராட்டம் தமிழுக்காக அன்று; தமிழனுக்காக | 50 |
| 9. தமிழ் ஆட்சிமொழி – புதுச்சேரியில் | 55 |
| 10. அரியணையில் அமர முடியாத அன்னை | 60 |

# ஒரு சொல் கேளீர்!

'தமிழனுக்கு இரும்புக்காது' என்றார் பாரதியார். காது மட்டுமின்றித் தோலும் எருமைத் தோல் தான்! எத்தனைக் கடுமையாக அடித்தாலும் இடித்தாலும் அவனுக்கு உறைக்காது. அருமைத் தமிழர்கள் மொழித் துறையில் இன்று எருமைத் தமிழர்கள் ஆகிவிட்டார்கள்! இதைக் குறிக்கத்தான் இந்நூலுக்கு இப்பெயர் இடப்பட்டது!

சுருக்கமாகச் சொன்னால் இன்றைய தமிழர்கள் தமிழ் தம் தாய்மொழியாக இருப்பதற்காக வெட்கப்படுகிறார்கள்! 'எங்கள் தமிழ் மொழி! எங்கள் தமிழ்மொழி!' என்று பாடிப் பெருமையடித்துக் கொண்டார் பாரதியார். 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று முழங்கினார் பாவேந்தர். தமிழில் வடசொற் கலப்பைக்களையத் தனித்தமிழியக்கம் கண்டார் மறைமலை யடிகளார். ஆங்கிலம் முதலிய அயன்மொழி களை அகற்றிப் புதிய தமிழ்ச் சொற்களைப் படைத்தார் பாவாணர். இவர்கள் காலத்தில் தமிழோடு சில பிறமொழிச் சொற்கள் கலந்திருந்தன; ஆனால் இன்றோ பிறமொழிச் சொற்களின் இடையில் சில தமிழ்ச் சொற்களும் இடம்பெற்று இருக்கின்றன!

"மார்னிங் ஒரு மேரேஜ் அட்டென் பண்ணேன். சோ, உங்களை மீட் பண்ண முடியலை. சாரி. பட், சன்டே ஈவினிங் செவன் ஓக்கிளாக் ஷ்யூரா மீட் பண்ணுவோம்; ஓகே?"

இப்படி இன்றைய தமிழன் கொஞ்சமும் கூச்சம் இல்லாமல் இயல்பாகப் பேசுவதையும் எழுதுவதையும் இன்று இருந்து பார்த்தால் அந்தப் பெருமக்கள் நாணத்தால் சாம்பமாட்டார்கள்; நான்று கொண்டு சாவார்கள்!

இந்த நிலை நீடித்தால் தமிழன் பேசும் மொழிக்குத் தமிழ் என்ற பெயர் இருக்காது. அவன் எழுத்துக்குத் தமிழ் என்ற பெயர் இருக்காது. இன்னும் சில ஆண்டுகளில் செந்தமிழும் ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதைந்து செத்த மொழியாகிப் போகும்.

அதன் பிறகு 'சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே' என்று பாடுவது பொருளொடு புணராப் பொய்ம்மொழியாகிப் போகும்.

தமிழ் வளர்ச்சிக்குப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் பெருமக்களும், தமிழ் அறிஞர் பெருமக்களும் இது பற்றிக் கவலைப்படாமல், வேடிக்கை பார்த்துக் கொண்டிராமல், அழகாகப் பேசுவதையும் எழுதுவதையும் நிறுத்திக் கொண்டு, இனியேனும் ஏதாவது செயல் செய்ய முன்வரவேண்டும்.

மொழிநிலை பற்றிய பத்துக் கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இயன்றால் படித்துப் பாருங்கள்; அல்லது இன்றைய குழந்தைகள் கையில் கொடுத்தாவது படிக்கச் செய்யுங்கள். அவர்களுக்காவது உண்மைத் தமிழ் உணர்வு வருகிறதா என்று பார்க்கலாம்.

'என்றுமுள தென்தமிழ்' என்று கம்பன் வியந்து பாராட்டிய நம் தமிழ் நம் கண்முன்னாலேயே மெல்லச் செத்துக் கொண்டிருக்கும் நிலையினை இந்தத் தலைமுறையினர்க்கு எடுத்துக் காட்டும் நோக்கத்துடன் எழுதப்பட்டவை அவை.

இந்நூலின் திருத்தி விரிவாக்கிய இரண்டாம் பதிப்பை ஒளியச்சியற்றிய புதுவைப் பாவலர் பண்ணை ஒளியச்ச கத்தார்க்கும், மறுதோன்றி அச்சகத்தார்க்கும் மெய்ப்புத் திருத்துதல் பணியில் உதவிய மொழிப்போர் மறவர் திரு இரா. சானகிராமன் க.மு. அவர்களுக்கும் என் இனிய நன்றி.


—இரா. திருமுருகன்

ஏழிசைச்சூழல்'
62, மறைமலையடிகள் சாலை
புதுச்சேரி—605 001.
பேசி : 0413—201191

## இன்றைய தமிழரிற் பெரும்பாலோர் நிலை

புதுத்தமிழ் ஆட்சி மொழிஎன்ற வண்டியில்
பூட்டி ஓட்ட

அதட்டினோம்; தள்ளினோம்; வாலை முறுக்கினோம்;
ஆர்ப்ப ரித்தோம்;

உதைத்தோம்; அடித்தோம்; உரப்பினோம்; கூடி
உசுப்பிப் பார்த்தோம்,

எதற்கும் அசையாது உறங்கிக் கிடக்கும்

**எ ரு மை க ளே!**

# 1. தமிழன் தமிழன் ஆவானா?

27.3.98 அன்று புதுவையில் நடந்த தமிழிசை விழாவைத் தொடங்கி வைத்துப் பேசிய நீதியரசர் பு. இரா. கோகுலகிருட்டினன் "தமிழன் அறிவால் வளர்ந்திருக்கிறான்; உணர்வால் வளரவில்லை" என்றார். அதாவது இன்னும் தமிழனுக்குத் தான் தமிழன் என்ற உணர்வே வரவில்லையாம்! நூற்றுக்கு நூறு சரியான மதிப்பீடு.

கணிப்பொறி அளவிட முடியாத ஆற்றல்களை உடையதாக வளர்ந்திருக்கிறது. ஆனால் அதனிடம் மானம், வெட்கம், சூடு, சுரணை என்ற உணர்வுகளில் எதையாவது எதிர்பார்க்க முடியுமா? இன்றைய தமிழனும் அப்படிப்பட்டவன் தான். எப்படி என்று கேட்கிறீர்களா?

எத்தனைத் தமிழர்கள் தம் தாய்மொழியாகிய தமிழில் கையெழுத்துப் போடுகிறார்கள்? நாம் ஏன் ஆங்கிலத்தில் கையெழுத்துப் போடுகிறோம்? என்று யாராவது எப்போதாவது எண்ணிப் பார்த்ததுண்டா? 'ஆங்கிலத்தில் ஒப்பமிடுவது தான் படித்தவனுக்கு அழகு' என்பது போல இயல்பாக அல்லவா இது நடந்து கொண்டிருக்கிறது? தமிழைப் படித்துத் தமிழைச் சொல்லிக் கொடுத்துத் தமிழால் பிழைக்கும் தமிழாசிரி

யர்களில் சிலர் கூட ஆங்கிலத்தில்தான் கையெழுத்துப் போட்டு வருகிறார்கள்!

எத்தனைத் தமிழர்கள் தம் பெயர்க்கு முன் இடும் தலைப்பெழுத்துகளை சு.ம., மு.கோ. என்று தமிழில் இடுகிறார்கள்? பெயரைத் தமிழில் எழுதும் போது கூட S.M., M.K. என்று தானே பெருமையுடன் எழுதுகிறார்கள்?

இன்றைய தமிழர்களில் யாராலாவது ஒரு மணித்துளி நேரமாவது ஆங்கிலம் கலக்காமல் பேச முடியுமா? "Sunday அன்னிக்கி Market போனேன்; Chicken வாங்கலாம்னு பார்த்தேன்; But, chicken கெடைக்கல, So, Mutton வாங்கி வந்தேன். Wife கிட்டே கொடுத்தேன்: அவளும் O.K. சொல்லிட்டா" என்று தானே இன்றைய தமிழன் பேசுகிறான்? இப்படித் தானே இன்றைய எழுத்தாளர்களும் எழுதுகிறார்கள்?

"ஞாயிற்றுக்கிழமை கடைக்குப் போனேன்; கோழி வாங்கலாம் என்று பார்த்தேன்; ஆனால் கோழி கிடைக்கவில்லை; அதனால் ஆட்டுக்கறி வாங்கி வந்தேன்; மனைவியிடம் கொடுத்தேன்; அவளும் சரி என்றாள்" என்று எழுதினால் அது கடுமையான பண்டிதத் தமிழாம்! இன்றைய தமிழர்களுக்கு விளங்காதாம்! இப்படித்தான் பெரிய பெரிய எழுத்தாளர்களும் சொல்லுகிறார்கள். இன்றைய தமிழ் இலக்கிய உலகத்தில் இந்தப் 'பெரிய எழுத்தாளர்கள்' வைத்தது தான் குடுமி! மழித்தது தான் மொட்டை! இந்த நிலை நீடித்தால் எதிர்காலத்தில் தமிழ்மொழி என்று ஒன்று இருக்குமா?



தொலைபேசி எண்ணைக் கேட்டால் "மூன்று நான்கு ஏழு ஒன்பது ஒன்று" என்று சொல்லும் தமிழனை எங்காவது பார்த்திருக்கிறீர்களா? வீட்டு எண்ணைக் கேட்டால் எந்தத் தமிழன் 'அறுபத்திரண்டு' என்பது போலத் தமிழில் சொல்லுகிறான்? மணி நேரத்தை யாராவது "ஒன்பது மணி" என்றோ "பத்து முப்பது" என்றோ சொல்கிறார்களா? Nine O'Clock என்றும் Ten Thirty என்றும் தானே பதில் வருகிறது? Sunday, Monday என்னாமல் ஞாயிறு திங்கள் என்று பேசும் தமிழனை எங்காவது பார்த்திருக்கிறீர்களா?

எந்த அலுவலகத்திலாவது நுழைந்து ஆங்கிலம் கலக்காத தமிழில் பேசினால் எந்தப் பணியாளராவது நம்மை நிமிர்ந்து பார்க்கிறாரா, Sir, Madam, என்னாமல் ஐயா, அம்மா என்று பேசும் தமிழரைக் காண முடிகிறதா?

வண்டிகளின் எண்களைத் தில்லியில் இந்தியிலேயே போடுகிறார்கள். குஜராத்தில் குஜராத்தி எண்களையே போடுகிறார்கள். கிலோ மீட்டர்க் கல்லின் எண்கள் கூட அவர்கள் மொழி எண்களாகவே உள்ளன. ஆனால் தமிழனுக்கென்று தமிழ் எண் என்று ஒன்று இருப்பது தமிழனுக்கே தெரியாது! எந்தப் பள்ளிக் கூடத்திலும் அதைக் கற்றுக் கொடுப்பதும் இல்லை. உ.வே.சா., திரு.வி.க. முதலிய தமிழறிஞர்கள் தம் நூல்களில் பயன்படுத்திய அந்தத் தமிழ் எண் வடிவங்கள் மெல்ல மறைந்து வருகின்றனவே, இது பற்றி யாராவது கவலைப்படுகிறார்களா? நான் என் வண்டியில் தமிழ் எண்களை எழுதி வைத்திருந்தேன். தெருவே போன இளைஞர்கள் சிலர் அதைப் பார்த்து "என்ன லாங்குவேஜ்டா இது? எவனோ பைத்தியக்காரன் இப்படி எழுதி

வைத்திருக்கிறான்!" என்று சிரித்து விட்டுப் போனார்கள். இவர்கள் தான் எதிர்காலத்தில் தமிழையும் தமிழ்க்கலைகளையும் காப்பாற்றப் போகிறவர்கள்!

தமிழ்நாட்டிலேயே தமிழ்க் குழந்தைகள் ஆங்கிலேயர்களாக வளர்க்கப்படும் கல்வி முறை குறித்து எந்தக் கல்வியாளரும் கவலைப்படுவதில்லை,

தமிழ்நாட்டு இசையரங்குகளில் ஏன் தெலுங்கில் பாடுகிறீர்கள்? என்று எத்தனை தமிழர்கள் தட்டிக் கேட்கிறார்கள்?

கோயிலுக்குப் போகும் தமிழர்கள் எத்தனை பேர் தமிழில் வழிபாடு செய்யும்படி வற்புறுத்துகிறார்கள்?

மொழி வளர்ச்சிக்குப் பாடுபடுவதற்காக அமைக்கப் படும் இலக்கிய அமைப்புகள் பெரும்பாலும் கூட்டம் கூடிப் பொறி பறக்கப் பேசுவதிலும், கைதட்டுவதிலும், தீர்மானம் போடுவதிலும், நாளேடுகளில் தம் பெயர் வரச் செய்வதிலுமே குறியாக இருக்கின்றன. செயல் என்பது அணு வளவும் இல்லை.

தமிழ் மொழியின் தொன்மையையும் பெருமைகளையும் நாவலிக்கப் பேசும் நல்ல தமிழறிஞர்கள் ஆயிரம் ஆயிரம் பேர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களில் மிகச் சிலரே தமிழுக்காகப் பரிந்து பேச முன்வருகிறார்கள். அவர்களிற் பெரும்பாலோர் வெறும் வாய்ப்பந்தலோடு சரி. மற்றும் சிலர் அரசு முன்னே தந்த அல்லது பின்னே தரக்கூடிய பட்டத்தையோ பதவியையோ மனத்தில் நினைத்துப் போராட்டம் என்றால் பதுங்கிக் கொள்கிறார்கள்; எதையும் எதிர் பார்க்காது தெருவில் இறங்கிப் போராடும் தமிழறிஞர்கள் மிகமிகச் சிலராக இருப்பதால் அரசு



அவர்களைப் பொருட்படுத்துவதில்லை. நாளேடுகள் கூட அவர்கள் போராட்டத்தை இருட்டடிப்புச் செய்கின்றன.

தமிழ்நாட்டில் 1956 இலும் புதுவையில் 1965 இலும் தமிழ் தான் ஆட்சி மொழி' என்று சட்டமியற்றப்பட்டது. 40 ஆண்டுக்கு மேல் ஆன இன்றும் சட்டம் ஏட்டுச் சுரைக்காயாகவே இருக்கிறது; தமிழில் அச்சிட்டுள்ள ஒன்றிரண்டு படிவங்களைக் கூடத் தமிழன் ஆங்கிலத்தில் தானே எழுதி நிரப்புகிறான்! யாராவது தமிழில் விண்ணப்பம் போட்டால் கூட அலுவலகத்திலிருந்து ஆங்கிலத்தில் தானே விடை வருகிறது!

'அரசு பணியாளர்கள், ஆங்கிலத்தில் எழுதும் மடலிலும் தமிழில் கையெழுத்திட வேண்டும்' என்று அரசு ஆணை பிறப்பிக்கப்படுகிறது. அந்த ஆணையில் கையெழுத்துப் போடும் உயர் அலுவலர் – அதில் மட்டும் – தமிழில் தான் போடுகிறார். ஆனால் அவரே அதற்குப்பிறகு எழுதும் எதிலும் ஆங்கிலத்தில் தான் ஒப்பமிடுகிறார்! இது ஒன்று போதாதா தமிழனின் மொழி உணர்வைத் தெளிவாகக் காட்டுவதற்கு?

புதுவை மாநில அரசிதழில் (Gazette) எல்லாச் செய்திகளையும் ஆட்சிமொழியாகிய தமிழில் வெளியிடும் படி ஆணை பிறப்பித்துப் பல மாதங்களாகின்றன. இது வரையில் யாரும் அதைச் சட்டை செய்ததாகவே தெரியவில்லை. அரசிதழ் இன்னும் வழக்கம் போல் ஆங்கிலத்திலேயே மேளதாளத்துடன் உலா வந்து கொண்டிருக்கிறது.

பெயர்ப் பலகைகளில் தமிழ் இதோ வந்துவிட்டது! அதோ

வந்து விட்டது! என்றார்கள், புதுவையில் அரசு அலுவலகங்களின் பெயர்ப் பலகைகளே ஆங்கிலத்தில் தான் உள்ளன!

5 ஆம் வகுப்பு வரையில் அனைத்துப் பாடங்களும் தமிழ் வழியில் என்றார்கள். ஆனால் மழலையர் வகுப்பில்கூடத் தமிழ் இன்னும் ஒரு பாடமாகவே தலை காட்டவில்லை! ஆங்கிலக் கல்வி தான் காடுமேடெல்லாம் முளைத்து வளர்ந்து செழித்து வருகிறது.

அரசு ஆணைகள், சட்டங்கள் வந்ததும் எங்கும் எதிலும் தமிழே பழுத்துத் தொங்கும் என்ற தமிழ்க்கிளிகள் ஆவலுடன் காத்திருந்தன. காய்கள் பழுக்காமல் காய்ந்து வெடித்துச் சிதறிய பிறகு தான் அந்த ஆணைகளும் சட்டங்களும் வெறும் இலவங்காய்கள் என்று தெரிந்தது அந்தக் கிளிகளுக்கு!

'மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்' என்பது பழமொழி, அதை 'மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவானா?' என்று சற்று மாற்றிப் புதுமொழியாக்க வேண்டும். மரம் நடுவிழாத் தடபுடலாக நடக்கிறது. பெரிய பதவியில் உள்ளவர்கள் வந்து மரம் நடும் சடங்கை – திருமணத்தில் அரசாணிக்கால் நடுவது போல – நடத்தி முடிக்கிறார்கள். நாளேடுகளில் படத்துடன் செய்திகள் வருகின்றன. அவ்வளவுதான்; அதன் பிறகு மரம் வைத்தோம் என்பதையே எல்லோரும் மறந்து விடுகிறார்கள். தமிழ் வளர்ச்சி பற்றிய எல்லா நடவடிக்கைகளும் இது போன்றவை தான்! யாரோ கொடுத்த நெருக்கடியால், மரங்கள் நடப்படுகின்றன. ஆனால்



நட்ட மரங்களுக்குத் தண்ணீர் ஊற்றுவது பற்றி யாரும் கவலைப்படுவதில்லை! ஆட்சியாளர்களை எடுத்ததற் கெல்லாம் குறை கூறும் எதிர்க்கட்சிக்காரர்கள் கூட அரசின் தமிழ்ப் புறக்கணிப்பை ஒரு குறையாக எடுத்துக் கூறுவதில்லை.

சாகித்திய அகாடமி போன்ற நடுவணரசின் அமைப்புகள், குழுக்கள் எதிலும் தமிழனுக்குத் தலைமையிடம் கிடைத்ததில்லை. தமிழனை மற்ற மொழிக்காரர்கள் யாரும் மதிப்பதில்லை. தமிழுக்கும் அதே நிலை தான்!

'உலகிலேயே முன்னே முளைத்த மூத்த மொழி' என்று தமிழனே தம்பட்டமடித்துக் கொள்ளும் நிலையில் தான் தமிழ் இருக்கிறது. இந்திய அரசே அதை உயர் தனிச் செம் மொழியாக ஏற்றுக் கொள்ளவில்லை. பதவியிலிருக்கும் போது இதைக் கண்டு கொள்ளாமல் இருந்த செல்வாக்குள்ள செந்தமிழ் அறிஞர்களெல்லாம் ஓய்வு பெற்ற பிறகு தான் இது பற்றி ஒப்பாரி வைக்கிறார்கள்!

இந்த அவல நிலைகளை எந்தத் தமிழ்ச் சான்றோரும் எண்ணிப் பார்ப்பதில்லை. "சான்றோரும் உண்டு கொல்! சான்றோரும் உண்டு கொல்!" என்று மதுரை நெடுந்தெருவில் கண்ணகி கேட்டது போல் தான் கேட்க வேண்டியுள்ளது. மொழியாவது, கலையாவது, பண்பாடாவது! என்று தான் பெரும்பாலான தமிழர்கள் 'தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, சம்பாத்தியம் இவையுண்டு; தான் உண்டு' என்று–வயிறே மூளையாக வாழ்ந்து வருகிறார்கள்!

அரம் போல் அறிவுக் கூர்மை இருந்தாலும், மரம் போல் உணர்வு இல்லாமல் வாழ்ந்து வரும் இன்றைய

தமிழனா தமிழைக் காப்பாற்றுவான்? தமிழ்க் கலைகளைப் பாதுகாப்பான்? இவனைப் பார்த்துத்தான்,

*"சொல்லடா நீயா தமிழனின் பிள்ளை?*
*சூடு சுரணை என்று கொஞ்சமும் இல்லை"*

என்று உணர்ச்சிப் பாவலன் காசிஆனந்தன் பாடினான்.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடியாகிய தமிழ்க்குடி, உலகில் தொடர்ந்து நிலைபெற வேண்டுமானால் இன்றைய தமிழன் முதலில் தமிழனாக வேண்டும். ஆவானா?

❖



# 2. தமிழன் தமிழில் ஒப்பமிடுகின்றானா?

தமிழன்னையைத் தனக்குரிய ஆட்சிக் கட்டிலில் அமர்த்த வேண்டும் என்பது நம் தலையாய குறிக்கோள். இது நடந்தால் பின் எல்லா நலன்களும் வந்தடையும். இக்குறிக்கோளை எய்த நாம் என்னென்னவோ செய்கிறோம்; கட்டுரை எழுதுகிறோம்; பாடல் இயற்றுகிறோம்; கூட்டம் போடுகிறோம்; பேசுகிறோம்; தீர்மானம் போடுகிறோம். அறிக்கை விடுகிறோம் [நம்மிற் சிலர் இவ்வளவோடு தமிழ்ப்பணி முடிந்ததாகக் கருதி நிறைவடைகிறோம்] பேரணி நடத்துகிறோம்; மறியல் செய்கிறோம்; சிறைபிடிக்கப்படுகிறோம்; ஆனால் இவற்றிலெல்லாம் சிறிதளவாவது பயன் விளைந் திருக்கிறதா? ஆட்சியாளர்கள் சிறிதேனும் அசைந்து கொடுத்திருக்கிறார்களா? பொது மக்கள் தாம் தம் ஆங்கிலக் காதலைச் சிறிதேனும் குறைத்துக் கொண்டிருக்கிறார்களா? இல்லையே! என்ன காரணம்? ஆட்சியில் இருப்பவனும் தமிழன் தான், அவனைத் தேர்ந்தெடுத்த மக்களும் தமிழர்கள் தாம். அப்படியிருந்தும் தமிழ் மொழி ஏன் தனக்குரிய இடத்தைப் பெற வில்லை? காரணம், தமிழன் தமிழனாக இல்லை! ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால் இன்றைய தமிழன்,

1. தன் பிள்ளைகளைத் தமிழ்வழிப் பள்ளிகளில் சேர்க்க விரும்பவில்லை.

2. தமிழ்நாட்டுக் கல்வி நிறுவனங்களில் தமிழே படிக்காமல் முனைவர் பட்டம் கூடப் பெறலாம் என்றுள்ள நிலைபற்றிப் [படித்த தமிழன்கூட ]க் கவலைப்படுவதில்லை.

3. 'எனக்குத் தமிழ் பேசத் தெரியாது, எழுத வராது' என்று சொல்வதில் பெருமைப்படுகிறான்.

4. தன் தாய்மொழியின் பெயரைக் கூட ஆங்கில ஒலியின் தான் 'டேமில்' என்று ஒலிக்கிறான்.

5. ஆங்கிலத்தை ஒருவன் அறைகுறையாக அறிந்திருந்தாலும் அவனை அறிவாளி என்றும், தமிழில் எவ்வளவு புலமை பெற்றிருந்தாலும் அவனை முட்டாள் என்றும் மதிக்கிறான்.

6. முழுமையாகத் தமிழிலோ, ஆங்கிலத்திலோ பேசத் தெரியாத இரண்டுங்கெட்டானாக இருக்கிறான்.

7. தன் குழந்தைகளை 'மம்மி, டாடி' என்று அழைக்க வைத்து அதைக் கேட்டுக் கிளு கிளுத்துப் போகிறான்.

8. நாள்களைச் சண்டே மண்டே என்றும் எய்ட்டீந்த், நெய்ன்ட்டீந்த் என்றும் இயல்பாகச் சொல்கிறான்.

9. ஆங்கிலத்தில் ஓர் எழுத்துப் பிழையைக் கண்டாலும் உடனே கண்டிக்கிறான். ஆனால் தமிழில் யார் எவ்வளவு பிழையாக எழுதினாலும் கவலைப்படாதிருக்கிறான்.

10. எஸ், நோ, சோ, பட், ஓகே, பிக்காஸ், அப்கோர்ஸ், ரைட், லெப்ட், டே, நைட், பர்ஸ்ட், லாஸ்ட், சார், மேடம் முதலிய ஆங்கிலச் சொற்களை அடிக்கடி வேண்டுமென்றே பெருமையுடன் தமிழில் கலந்து பேசுகிறான்.



11. தமிழ்நாட்டுக்குள் செல்லும் அஞ்சல்களில் கூட முகவரிகளை ஆங்கிலத்தில் எழுதுகிறான்.

12. தன் முகவரி நறுக்குகளை (Visiting Cards) மடற்கற்றைகளை (Letter pads) ஆங்கிலத்தில் மட்டுமே அச்சிட்டு வைத்திருக்கிறான்.

13. தன் நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுத வேண்டும் என்று சட்டம் இருந்தும், அதையும் மீறி ஆங்கிலத்தில் மட்டும் எழுதுகிறான்.

14. தன் வீட்டு எண்ணையோ, தொலைபேசி எண்ணையோ கேட்டால் ஆங்கிலத்திலேயே சொல்கிறான்.

15. தமிழில் பெயர் எழுதும் போதும் தன் பெயரின் தலைப்பெழுத்தை P. முருகன், C. கந்தன் என்று ஆங்கிலத்தில் எழுதுகிறான்.

16. திருவள்ளுவர் நகரை டி.வி. நகர் என்றும், மறைமலை அடிகள் சாலையை எம்.எம்.ஏ. சாலை என்றும் தான் குறிப்பிடுகின்றான்.

17. தன் தாய்மொழியில் கையெழுத்துப் போடுவதே தனக்கு மானம் என்று உணராமல் ஆங்கிலத்தில் கையெழுத்துப் போட்டு மகிழ்கிறான்.

18. தன் வண்டியின் எண்ணுப் பலகையைத் தமிழில் எழுதும் எண்ணமே இல்லாமல், அப்படி எழுதுவோரை ஏளனம்

செய்கிறான்.

19. தமிழ் எண்கள் என்று ஒன்று இருப்பதே தெரியாமல் இருக்கிறான்.

20. தமிழ் வளர்ச்சிக்கான போராட்டங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறான். அல்லது யார் வீட்டு இழவோ என்று புறக்கணிக்கிறான்.

எனவே, தமிழனே இன்னும் தமிழனாகாமல் ஆங்கில அடிமையாய்க் கிடக்கும் போது, அவன் மொழி எப்படி ஆட்சிக்கட்டில் ஏறும்? தேர்ந்தெடுப்பவன் தமிழனாக இருந்தால், தேர்ந்தெடுக்கப்பட்டு ஆளவந்தவன் தமிழனாக இருப்பான். ஆள்பவன் தமிழனாக இருந்தால் தான் ஆட்சி மொழி அவன் மொழியாக இருக்கும்.

தமிழன் எப்படி இவ்வாறு ஆங்கில அடிமையாக மாறினான்? எப்போது யாரால் இந்த மாற்றம் ஏற்பட்டது? ஆம்; இது திட்டமிட்டு இழைக்கப்பட்ட தீமை. முதன் முதல் இத்திட்டத்தை வகுத்துத் தந்தவன் தாமசு மெக்காலே. ஆண்டு 1834. 'இந்தியர்கள் நிறத்தாலும் தோற்றத்தாலும் வேறுபட்டவர்களாக இருந்தாலும் எண்ணத்தாலும் செயலாலும் வெள்ளையர்களாக ஆக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தை வெளிப்படையாக எழுதியே இந்தியர்களுக்கான கல்வித் திட்டத்தை வகுத்துக் கொடுத்தான் அவன்! அதன் விளைவைத்தான் இன்றும் நாம் அறுவடை செய்து கொண்டிருக்கிறோம். அந்தக் கல்வித்திட்டம் உண்டாக்கிய உணர்வு தான் தமிழனை 'ஆங்கிலம் தான் அறிவுமொழி, அறிவியல் மொழி' நாகரிகத்தின் அடையாளம்' என்றெல்லாம் நம்ப வைத்துவிட்டது. எனவே அவன் இப்போது உடலால் தமிழனாக இருந்தாலும் உள்ளத்தால் ஆங்கிலேயனாக இருக்கிறான்.



முதலில் அவனைத் தமிழனாக மாற்ற வேண்டும். அது தான் இன்று நாம் மேற்கொள்ள வேண்டிய அடிப்படைப்பணி. சரி, தமிழனை தமிழனாக்க என்ன செய்யலாம்?

ஒரு சுவரில் விளம்பரம் ஒன்றை எழுத வேண்டும் என்றால் முதலில் என்ன செய்ய வேண்டும்? அதில் ஏற்கெனவே ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளைப் பிய்த்தெறிய வேண்டும்; எழுதப்பட்டுள்ள எழுத்துகளை அழிக்கவேண்டும்; கறைகளைக் கழுவித் தூய்மை செய்ய வேண்டும். பின்னர் வெள்ளையடிக்க வேண்டும். அதன் பிறகு வேண்டியதை எழுத வேண்டும் அப்போது தான் நாம் எழுதுவது அதில் பதியும். அதுபோல், முதலில் தமிழனுடைய ஆங்கிலப் பித்தத்தை அகற்றி அவனுக்குத் தாய்மொழி உணர்வை உண்டாக்க வேண்டும். தாய்மொழியில் கையெழுத்திடுவதே மானம் உள்ளவனுக்கு அழகு என்பதை முதலில் அவன் உணரச் செய்ய வேண்டும். அதன்பிறகு அவனைத் தமிழில் கையெழுத்துப் போடச் செய்ய வேண்டும்.

கூட்டம், பேச்சு, தீர்மானம், வேண்டுகோள், போராட்டம் முதலியவற்றைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். தன் தாய்மொழிக்கு மதிப்பளித்து அதில் ஒப்பமிடும் தமிழன், மெல்லத் தமிழனாக மாறுவான். அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிக்கு வரும் தமிழனும் தமிழனாக இருப்பான். தமிழன் பொறுப்பேற்று நடத்தும் ஆட்சியில் தமிழன்னை அரியணையில் வீறு பெற வீற்றிருப்பாள். தமிழ் வளர்ச்சிப் பணிகள் தாமாக நடக்கும், ஆங்கிலவழிப் பள்ளிகள் எல்லாம் தமிழ்வழிப்

பள்ளிகளாகமாறும்; தமிழர்கள் நல்ல தமிழில் பேசக் கற்றுக் கொள்வார்கள்; எழுத முயல்வார்கள்; அலுவலகப் பணிகள் தமிழில் நடக்கும்; தமிழ் தெரியாதவன் எவனும் அந்த ஆட்சியில் அரசு பணியில் அமர முடியாது. உயர் பதவியில் உட்கார முடியாது; அரசின் மடல்கள், ஆணைகள், அறிவிக்கைகள் யாவும் தமிழில் வரும்; எங்கும் பெயர்ப்பலகைகள் தமிழில் இருக்கும். ஊர்ப்பெயர்கள் தமிழாகும்; வண்டிகளின் எண்ணுப்பலகைகளில் தமிழ் எண்களே இருக்கும். தமிழ்ச் சான்றோர்களுக்கு உரிய மதிப்பு இருக்கும்.

தமிழில் கையெழுத்துப் போடுவிக்கப் போராட்டங்கள் தேவையில்லை; பொருள் செலவு தேவையில்லை. ஒவ்வொரு தமிழனும் தானாக, ஒரு காசு செலவில்லாமல் செய்யக் கூடிய எளிய ஆனால் அடிப்படையான தமிழ்ப்பணி இது!

அண்மையில் புதுச்சேரியில் நடந்த ஒரு கூட்டத்தில், தமிழை வளர்ப்பது யார் பொறுப்பு? என்பது பற்றிய கருத்து மோதல், தமிழறிஞர்களுக்கிடையே சற்றுக் கடுமையாக இருந்தது. அதைப் பார்த்த, செருமனியிலிருந்து வந்திருந்த மாணவர்கள் சிலர், 'தாய்மொழிக்கு மதிப்பளிப்பதில் கருத்து வேறுபாடு கொண்டு இப்படிச் சண்டை போட்டுக் கொள்வோரை இந்த நாட்டில் தான் பார்க்கிறோம்' என்று சொல்லிக் காறித்துப்பினார்கள்!

இது போன்ற இழிநிலைகள் அப்போது இராமற் போகும். எனவே, இன்று நாம் முதற்பணியாகத் தமிழனைத் தமிழில் ஒப்பமிடச் செய்வோம். மிகவும் எளிய பணி தான், ஆனால் இதைச் செய்து முடிக்கவே ஒரு பிறவி போதாது என்று எண்ணத் தோன்றுகிறது!



# 3. தமிழுக்குத் தக்க இடம் எப்போது? எப்படி?

'ஒரு மாநிலத்தின் சட்டமன்றம் அம்மாநிலத்தில் வழக்கில் உள்ள ஒரு மொழியையோ, பலமொழி களையோ, இந்தியையோ மாநிலத்தின் ஆட்சி மொழியாகச் சட்டம் செய்துகொள்ளலாம்' என்று இந்திய அரசியல் சட்டத்தின் 345 ஆம் பிரிவு கூறுகிறது. சீனாவில் சீனம், பிரான்சில் பிரஞ்சு, செருமனியில் செருமன் என்பது போல இந்தியாவில் நாடு முழுவதற்கும் இந்தி தான் ஆட்சி மொழி என்றில்லாமல், மாநிலந்தோறும் மக்கள் மொழிகள் ஆட்சிமொழிகளாக அமைய வகை செய்தோரின் நேர்மையைப் பாராட்ட வேண்டும். அதன்படி 1956 இல் தமிழ் நாட்டிலும், 1965இல் புதுச்சேரியிலும் தமிழே ஆட்சி மொழி என்று சட்டங்கள் செய்யப்பட்டன. இதுவரையில் எல்லாம் முறையாகத்தான் நடந்து வந்துள்ளன. ஆனால் சட்டம் செய்து இத்தனை ஆண்டுகளாகியும் தமிழ் இன்னும் ஆட்சிக்கட்டிலில் அமரவில்லை. ஏனென்றால் அதில் ஆங்கிலம் இன்னும் அழுத்தமாக அமர்ந்து கொண்டிருக்கிறது.

கல்வி நிறுவனங்களிலும் ஆங்கிலேயர் ஆண்ட போது இருந்ததை விடப் பலமடங்கு மிகுதியாக இன்று ஆங்கிலம் செல்வாக்குப் பெற்றுள்ளது. ஆங்கிலேயருக்கு அடிமை

செய்வதை ஒழித்த நாளின் பொன்விழாவைக் கொண்டாடி மகிழும் நாட்டுப்பற்று மிக்கவர்கள் கூட, ஆங்கில மொழிக்கு அடிமை செய்து வாழ்வதைப் பெருமையாகக் கருதுவது வியப்பிலும் வியப்பு! இன்றைய படித்த தமிழர்களின் பேச்சும் மூச்சும் ஆங்கிலமாகவும் இல்லாமல் தமிழாகவும் இல்லாமல் 'இரண்டுங்கெட்டா'னாக இருப்பதற்கு இன்றைய தொலைக் காட்சிகள் தொட்டவிட மெல்லாம் சான்று பகரும்.

இவற்றிற்கெல்லாம் காரணம்? 1. ஆளவந்தோர் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதில் குறியாய் இருப்பது. 2. மக்களின் குருட்டுத்தனமான ஆங்கிலக்காதல்.

'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்றும், 'இன்றும் தமிழ் என்றும் தமிழ்' என்றும் அழகாகப்பேசி ஆட்சிக்கு வந்தவர்கள் தமிழ் முதன்மை பெற உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை. வெளியில் எப்படிப் பேசினாலும் உள்ளத்தில் அவர்கள் ஆங்கிலத்துக்குச் சிறப்பிடம் அளித்திருப்பதே இதற்குக் காரணம். ஆட்சி செய்வோரே தம் பெயரின் தலைப் பெழுத்துகளைப் பி.டி.ஆர்., கே.என். என்றெல்லாம் ஆங்கிலத்தில் போட்டுக் கொள்வதும், தமிழில் கையொப்பமிட வேண்டும் என்ற அரசு ஆணையை மீறுவோரை அரசு கண்டு கொள்ளாமல் இருப்பதும், ஆணை பிறப்பித்துப் பல ஆண்டுகள் ஆகியும் பெயர்ப்பலகைகள் தமிழில் எழுதப்படாததும், "ஆங்கிலத்தை விட்டால் நாம் காட்டுமிராண்டிகள் ஆகிவிடுவோம்" என்று ஓர் அமைச்சரே அச்சுறுத்துவதும் இந்த அவல நிலையின் வெளிப்பாடுகளே.

தமிழ் வழியில் படித்தோர்க்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை, ஆங்கில வழிப்பள்ளிகளைத் தமிழ் வழிப்பள்ளி களாக்குதல் போன்ற தமிழ்ப்பணிகளைச் செய்தால் எங்கே



ஆங்கிலம் விரும்பிகளின் எதிர்ப்பு வந்து, அதனால் தம் ஆட்சி கவிழ்ந்து விடுமோ என்ற அச்சம் ஆள்வோரிடம் உள்ளது. நாற்காலிக்கே முதலிடம்; ஆங்கிலத்துக்கு அடுத்த இடம்: தமிழுக்கு மூன்றாமிடம் தான்!

இவர்கள் தமிழ்ப் பயிரை இந்தி மாடு மேயாமல் வேலி போட்டுக் காப்பதை மட்டுமே தமிழ்ப்பணி என்று நினைக்கிறார்கள். வேலிக்குள்ளே இருந்து பயிரை வயிறார மேய்ந்து வரும் ஆங்கில ஆட்டுக்குத் தண்ணீர் குடிப்பாட்டித் தட்டிக் கொடுக்கிறார்கள்!

மக்களில் பெரும்பாலோர் தமக்கு ஆங்கிலம் தெரியா விட்டாலும் தம் மழலைச் செல்வங்கள் 'மம்மி' 'டாடி' என்று அழைப்பதைத்தான் நாகரிகமாக நினைக்கிறார்கள். தமிழே எழுதப்படிக்கத் தெரியாமல், கையெழுத்தை மட்டும் கோலம் போடுவது போல் தமிழில் போடக் கற்றுக் கொண்டவன் கூட 'M. பழனி' என்பது போல அதில் ஓர் ஆங்கில எழுத்தையாவது சேர்த்துக் கொள்வதே பெருமை என்று நினைக்கிறான்! தமிழனின் உயிரணுக்களில் அப்படி ஒரு ஆங்கில அடிமைத்தனம் ஊறிக்கிடக்கிறது! தாய்மொழி, ஆட்சிமொழி, பயிற்று மொழி என்பன என்ன என்று தெரியாதோரே பொது மக்களிற் பெரும்பாலோர். ஆகையால் தமிழுக்காகப் போராட அவர்கள் முன் வருவதில்லை. தமிழ்க்கான போராட்டம் மக்கள் இயக்கமாக இல்லாமல், தமிழறிஞர்கள் சிலரின் கிளர்ச்சியாக இருப்பதால் யாரும் அதைப் பொருட்படுத்துவதில்லை. ஆளும் கட்சியின் குறைகளைப் பட்டியலிடும் எதிர்க்கட்சிகள் கூட இதை ஒரு குறையாகச் சேர்த்துக் கொள்வதில்லை.

இந்நிலையில் தமிழுக்குத்தக்க இடம் வேண்டும் என்றால்,

1. தமிழ் மொழிக்காகப் பேரளவில் ஒன்று திரண்டு போராடும் அளவு மக்களுக்கு மொழி விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும். அல்லது,

2. மக்களிடையே தொடர்ந்து பரப்புரை செய்து, உண்மையான மொழியுணர்வு உள்ளவர்களுக்கே தேர்தலில் ஒப்போலை தந்து அடுத்த அரசையாவது மண்ணின் மொழிக்கு முதன்மை தரும் அரசாக அமைக்குமாறு செய்ய வேண்டும். அல்லது,

3. எட்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்து மொழிகளும் இந்தியாவின் ஆட்சி மொழிகள் என்று அரசியல் சட்டத்தைத் திருத்துமாறு செய்ய வேண்டும். இதனால் ஆட்சிமொழி, பயிற்று மொழி, தொடர்பு மொழி ஆகிய அனைத்தும் தமிழாகி விடும்.

இவற்றில் எதையாவது செய்ய வேண்டும். பேசிக் கொண்டிருந்ததோ எழுதிக் கொண்டிருந்ததோ போதும். இனித் தேவைப்படுவது போராட்டமே.

'போராட்டம் இன்றிப் பொருவில் தமிழுக்குத்
தேரோட்டம் இல்லை தெளி'

முனைவர் வ.சுப. மாணிக்கனார்

❖



# 4. தமிழைக் கொல்லும் தனியார் தொலைக்காட்சிகள்

மக்கள் வாழ்க்கையை மாற்றியமைப்பதில் வன்மை வாய்ந்த கருவி திரைப்படம். 'முன்னே முளைத்த காதைக் காட்டிலும் பின்னே முளைத்த கொம்பு வலியது' என்பது போல், அந்தத் திரைப்படத்தை விடப் பலமடங்கு வலிமை மிக்கதாக வளர்ந்து விட்டது தொலைக்காட்சி.

*அம்பலங்களில் திரையரங் கிருந்தது அந்தக்காலம் –*
*வீட்டின்*
*அறைகள் எல்லாம் திரையரங் கானது இந்தக் காலம்!*

இவ்வளவு வன்மையான கருவிகொண்டு செய்யப்படும் மொழிக் கொலைகளும், பண்பாட்டுச் சிதைவுகளும் விரைவாக ஓர் இனத்தையே அடையாளம் காணமுடியாதபடி அழித்துவிடக் கூடியவை. எனினும் இது பற்றி யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை!

## பண்பாட்டுப் பாதுகாப்பில் திரைத்துறையும் தொலைக்காட்சியும்

திரைப்படங்களை உருவாக்குவோர் சிலரிடம் காணப்படும் பண்பாட்டுப் பாதுகாப்பு உணர்வில் பத்தில் ஒரு பங்கைக் கூடத்

தொலைக்காட்சி நடத்தும் தனியார் யாரிடமும் காண முடியவில்லை. அதே போலத் திரைப்படத்துக்கு உள்ள தணிக்கை ஏற்பாடு, தொலைக்காட்சித் தான்தோன்றித் தனங்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. 'தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன்' என்ற நிலையே உள்ளது. சினிமா, தியேட்டர், டைரக்டர், ஷோ, இண்டர்வெல், மேக்கப் முதலிய ஆங்கிலப் பெயர்களுடன் தமிழகத்தில் நுழைந்த திரைப்படம் நாளடைவில், திரைப்படம், திரையரங்கம், இயக்குநர், காட்சி , இடைவேளை, ஒப்பனை முதலிய நல்ல தமிழ்ப் பெயர்களைப் பெற்று வளர்ந்தது. ஆனால் பிறக்கும் போதே தமிழை உதைத்துக் கொண்டும், ஆங்கிலத்தை அணைத்துக் கொண்டும், சன் டி.வி., ராஜ் டி.வி. ஜெ.ஜெ. டி.வி., ஜி.இ.சி., கோல்டன் ஈகிள் முதலிய பிறமொழிப் பெயர்களையே சூட்டிக் கொண்டு பிறந்திருக்கின்றன இன்றைய தனியார் தொலைக்காட்சிகள்! தொலைக்காட்சி என்ற சொல்லைக் கூட அவை ஒலிப்பதில்லை.

## அரசு தொலைக்காட்சியும் தனியார் தொலைக்காட்சியும்

அரசு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலாவது 'கண்மணி பூங்கா' 'ஒலியும் ஒளியும்' 'காண்போம் கற்போம்' 'திரைமலர்', 'திரைச் செண்டு' இளந்தென்றல், மனைமாட்சி முதலிய சில தமிழ் மணக்கும் பெயர்களைக் கேட்க முடிகிறது. ஆனால் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மொழி உணர்வுள் ளவர்கள் மூக்கைப் பிடித்துக் கொள்ளும் அளவுக்கு ஒரே ஆங்கில நெடி, தமிழ் மூக்குகளில் தீ நாற்றமாக நாறும் இந்த நெடி தொலைக்காட்சிக்காரர்களுக்குச் சந்தனமாக மணக்கிறது!



சன் தொலைக்காட்சியில் டெலிஷாப்பிங், சூப்பர் ஹிட் ஷோ, நைட்ஷோ, அடல்ட்ஸ் ஒன்லி, ஸ்மைல் ப்ளீஸ், டாப்டென் மூவிஸ், சூப்பர்டென், கேண்டிட் கேமரா, சூப்பர் சீன்ஸ், ப்ளாஷ்பேக், எல்போர்டு,

ராஜ் தொ.கா.வில் ஓல்டு இஸ் கோல்டு, ஷோ டைம், டீ இன் ஒன், கோல்டன் டைம், கார்ட்டூன், சில்ட்ரன்ஸ் பார்க், சூப்பர் சிக்ஸ், மூவிடைம், டெலிசீரியல், லக்கி கீ, மியூசிக் டைம், ப்ளாஷ் பேக், ஸ்டைல் ஆன், டேக் இட் ஈஸி, வி.ஐ.பி.விசிட்,

ஜி.இ.சி.யில் லேட்டஸ்ட், ஹ்யூமர்கிளப், கேரி ஆன் கிட்டு,

கோல்டன் ஈகிளில் ஹலோ டாக்டர், பேஷன், ஜாலிபார்க், ஸ்டார்டைம், திங் ப்யூட்டிஷோ, ஈகிள் கேம்ஸ், ஸ்டார் அண்டு ஸ்டைல் முதலியன தமிழ் நிகழ்ச்சிகளின் பெயர்கள்!

## நிகழ்ச்சிகளின் தலைப்புகள்

கிரிமினல்ஸ், கம்ப்யூட்டர் கார்னர், ராம்ஜியின் பயோடேட்டா, கிரிஜா ராகவனின் லேடீஸ் ஸ்பெஷல், ஆனந்த கீதனின் ஈகிள் க்விஸ், ஸ்போர்ட்ஸ் க்விஸ், ஈகிள் க்விஸ் – இப்படித்தான். தொலைக்காட்சித் தொடர்களின் தலைப்புகளும் டாப்டக்கர், எஸ்கேப் என்பன போலத்தான்! ஒவ்வொரு பகுதிக்கும் எப்பிஸோட்–1,2,3... என்று பெயர் – அதுவும் ஆங்கில எழுத்திலேயே!

தமிழும் இல்லாமல் ஆங்கிலமும் இல்லாமல் உங்கள் சாய்ஸ், மசாலா மிக்ஸ், சினிமசாலா இன்றைய ஸ்பெஷல், உங்கள் சீன்ஸ், ட்ரெண்ட் மாறிப்போச்சு, கேரி ஆன் கிட்டு என்பன

இரண்டுங்கெட்டான் தலைப்புகள் வேறு!

## அறிவை அகற்றும் [=நீக்கும், அகலமாக்கும்] நிகழ்ச்சிகள்!

தனியார் தொலைக்காட்சிகளில் பயன் தரும் சில நல்ல நிகழ்ச்சிகள் இருப்பதை மறுக்கவில்லை. எனினும் பெரும்பாலான நிகழ்ச்சிகள் திரைத்துறையை அடிப்படை யாகக் கொண்டனவாகவே அமைக்கப்படுகின்றன. அறிவை வளர்க்கும் நொடி வினாப் போன்ற நிகழ்ச்சிகளும் திரைப்படம் பற்றியனவாகவே உள்ளன. கல்லூரி மாணவர்களை வைத்துக் கொண்டு நிகழ்த்தும் நொடி வினாவில் கூட 'இன்ன நடிகை இதுவரை எத்தனை பேரைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்?' இன்ன நடிகையின் மூக்கை விட இன்ன நடிகையின் மூக்கு நீளமானதா? குட்டையானதா? என்பன போன்ற 'ஆழ்ந்து அகன்ற அறிவை வளர்க்கும் கேள்வி'களைக் கேட்டு மாணவர் பொது அறிவு மதிப்பிடப்படுகிறது! இசை பற்றிய நிகழ்ச்சி என்றாலும் பெரும்பாலும் திரைப்படப் பாடல்கள் தாம்! நேர்காணல் என்றால் 90 விழுக்காடு திரைப்பட இயக்குநர்கள், நடிகர், நடிகைகள், பாடகர்கள் தாம்! பிள்ளையார் தாய் தந்தையரையே உலகமாக எண்ணிச் சுற்றி வந்தது போல, இவர்களுக்குத் திரைத்துறையே உலகம், அதற்கப்பால் ஒன்றுமேயில்லை என்பது போல நிகழ்ச்சிகளை உருவாக்குகிறார்கள்; போட்டிகளை நடத்துகிறார்கள். அவற்றில் அறிவுமிக்கோர்க்கு ஆயிரக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பரிசுகளை அளித்து ஊக்குவிக்கிறார்கள்! அறிவியலறிஞர்கள், மருத்துவ வல்லுநர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் அரசியலறிஞர்கள் – இவர்களைப் பற்றிய



நிகழ்ச்சிகளோ, நேர்காணல்களோ தனியார் தொலைக் காட்சிகளில் இடம் பெறுவது அரிது. நிகழ்ச்சிகளின் இயல்புகள் இருக்கட்டும்; நாம் கவலைப்படுவதெல்லாம் அவற்றில் செய்யப்படும் மொழிக் கொலைகள் பற்றியே.

## 24 மணி நேரமும் இடைவிடாத இரைச்சல் தொல்லை.

தனியார் தொலைக்காட்சிகளில் ஒரு நாளைக்கு ஒன்பது படங்களுக்கு மேலும் ஒளிபரப்பப்படுகின்றன! அவற்றை விரும்பாத மூதாளர், நோயாளர், மாணாக்கர்கள் கூடப் பக்கத்து வீடுகளிலிருந்து வந்து காதில் விழும் அவற்றின் இரைச்சல்களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியவில்லை!

## விளம்பர அறுவைகள்

இடையிடையே விளம்பரக்காரர்கள் அறுக்கும் அறுவையோ கொஞ்சம் அன்று; நஞ்சம்! வள்ளுவர் இன்று இருந்தால், 'விளம்பரம் என்று ஒன்று போல் காட்டி உயிர் அறுக்கும் வாள் அது' என்று குறள் எழுதுவார்!

"கே.ஆர்.ஆர். பைனான்ஸ் அண்டு இன்வெஸ்ட் மெண்ட்ஸில் முதலீடு செய்யுங்கள்" "25 பெர்சன்ட் இன்ட்ரஸ்ட் எப்படித் தரமுடிகிறது?" "அது ஈஸி" என்ற விளம்பரம் மட்டும் திரும்பத் திரும்ப மூச்சு விடும் முன்னே முந்நூறும் நானூறுமாக வருகின்றது? கட்டணத்துக்காகச் சற்றும் பொறுப்பில்லாமல் இப்படி விளம்பரம் செய்வது, பணம் வாங்கிக் கொண்டு அடிக்கும் அடியாட்களின் செயலைவிட இழிவானது! கொடுமையானது! நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் இப்படி ஓர் உரிமையையா

இப்படி ஓர் உரிமையையா இவர்களுக்குக் கொடுத்திருக்கிறது? ஓயாமல் ஒலி ஒன்றைக் கேட்க வைத்தே ஒருவரைக் கொன்றுவிடலாம்! தோல் காது உள்ளவர்கள் இந்த இரைச்சல்களை எப்படிப் பொறுத்துக் கொள்கிறார்களோ தெரியவில்லை! ஒரு வேளை பாரதியார் கூறியது போல் தமிழனுக்கு இருப்பது இரும்புக்காதோ?

நடப்பது தமிழ் நிகழ்ச்சி; கேட்போர் தமிழர்; அறிவிப்புச் செய்வோர் தமிழர், ஆனால் அறிவிப்பு மட்டும் இப்படி வரும்; "திஸ் பார்ட் ஆப் த பில்ம் இஸ் ஸ்பான் சோர்டு பை ரமேஷ் கார் பைனான்ஸ் கார்ப்பரெஷன்" "திஸ் ப்ரோகிராம் இஸ் பிராட் டு யூ பை எல்.கே.எஸ். கோல்டு ஹவுஸ் அன்டு ஸ்நேஹம் பைனான்ஸ்" என்ன செய்வது? இப்படி ஆங்கிலத்தில் அறிவித்தால் தான் தமிழ் மக்களுக்குப் புரிகிறேன் என்கிறது! தொலைக்காட்சிப் பெட்டி வைத்திருக்கும் தமிழர்கள் ஆங்கிலம் தெரியாதவர்களா என்ன!

இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குத்தான் இந்தக் 'காலங்களில் அவள் வசந்தமும், மாதங்களில் அவள் மார்கழியும்' ஒரு நாளைக்கு நூறு முறை வீதம் வந்து கொண்டிருக்கப் போகிறதோ தெரியவில்லை! {இசை இன்ப மூட்டும் வகையில் தான் உள்ளது; ஆனால் அதுவே அளவுக்கு மேல் திணிக்கப்படுவதால் எரிச்சலூட்டுவதாக மாறி விடுகிறதே} போதாக்குறைக்கு "அனுபவ் பைனான்ஸ் அண்டு இன்வெஸ்ட்மென்ட்ஸ்" "அனுக்ரகா ஜ்வெல்லெர்ஸ்" "பாஹிமாஸ்" வேறு! இவை அடிக்கடி வந்து அச்சுறுத்தும்போது, முன்னதாகவே கண்களையும் காதுகளையும் பொத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது!

வேறு எந்த மொழியிலாவது இத்தகைய அட்டூழியங்களைக் காணமுடியுமா? உரையாடுவோர் சொல்லுக்குச் சொல் 'சோ' 'பட்' 'ஓ.கே. 'அப்கோர்ஸ்' போன்ற சொற்களைக் கலந்து தங்கள் ஆங்கில மொழிப் புலமையை உலகறியச் செய்து பெருமைப்படுவது வேறு!



## சான்றோர் கடன்

தமிழ்ச் சான்றோர்களே!, இவர்கள் இப்படித் தமிழ்த்தாயைக் கழுத்தை அறுக்கும் போது அவள் கதறித்துடிக்கும் குரல் உங்கள் காதில் விழவில்லையா? நுண்ணறிவும் எஃகு செவியும் பொறுப்பும் உடைய உங்களால் எப்படி இதைப் பொறுத்துக் கொள்ள முடிகிறது? நாம் சொன்னால் இவர்கள் கேட்கவா போகிறார்கள்? என்று சும்மா இருந்து விடுகிறீர்களா? தமிழன்னையை அறுக்கும் வாளாக வந்தவர்களைப் பார்த்து நீங்கள் வாளா இருப்பது முறையா? நம்வீட்டுப் பிள்ளைகள் நடுத்தெருவில் பந்து விளையாடினால், 'சொன்னால் கேட்கவா போகிறார்கள்; வண்டிகளில் அகப்பட்டுச் செத்துத் தொலையட்டும்!' என்று விட்டு விடுவோமா? அப்படி இருந்தால் நாம் பொறுப்புள்ள பெற்றோர் ஆவோமா? அவர்கள் கேளாவிட்டாலும் அறிவுறுத்துவது நம்கடமை அல்லவா? இந்த வரம்பழிவுகளைப் பார்த்துக் கொண்டு நாம் சும்மா இருந்தால், 'பெரியோர்கள் இவற்றை எந்த எதிர்ப்பும் இல்லாமல் ஏற்றுக் கொள்கிறார்கள் போலும்; நாம் செய்வது சரி தான்' என்று அவர்கள் மேலும் பிழை செய்ய ஊக்கம் கொள்ள மாட்டார்களா? கருதிய பயன் விளையாவிட்டாலும், கடமையைச் செய்தோம் என்ற நிறைவாவது நமக்குக் கிடைக்கும் அல்லவா? கடன் என்ப நல்லவை எல்லாம்! நல்லவற்றைச் சொல்லிக் கொண்டே யிருப்போம்; கேட்பவர்கள் கேட்கட்டும். இன்று

இல்லாவிட்டாலும் என்றாவது அதனால் பயன் விளையாமற் போகாது. நீரோட்டத்தில் போடப்பட்ட சிறு கூழாங்கல் கூட ஓரளவு நீரின் விரைவுக்குத் தடையாவது போல், நம் அறிவுரைகள் இத்தீமைகள் பரவும் விரைவையாவது ஓரளவு குறைக்கும். எண்ணிப் பாருங்கள்.

தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடும் தாளிகைகளே, மொழித் தொண்டு நிறுவனங்களே, இந்தத் தொலைக்காட்சிகளால் தமிழுக்கு என்ன தீங்கு வந்து விடும்? என்று இராதீர்கள். இவற்றைக்களையும் வழிவகைகளை எண்ணித் திட்டமிடுங்கள்; செயற்படுத்துங்கள் என்று அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

தொலைக்காட்சி நடத்துவோரே, உங்கள் தாய்மொழி எதுவாக இருந்தாலும், நீங்கள் நடத்துவன தமிழ் நிகழ்ச்சிகள். அதில் தேவையில்லாத ஆங்கிலக் கலப்படம் ஏன்? மற்ற நாடுகளில் இப்படி நடக்க விடுவார்களா? அன்பு கூர்ந்து எண்ணிப்பாருங்கள்! இனியேனும் உங்கள் பொறுப்பை உணருங்கள்; போக்கினை மாற்றிக் கொள்ளுங்கள் என்று அன்புடன் வேண்டுகிறோம். தொடர்ந்து இந்நிலை நீடித்தால் உங்களைப் பார்த்து,

*'சொல்லடா நீயா தமிழனின் பிள்ளை?*
*சூடு சுரணை என்று கொஞ்சமும் இல்லை!' என்றும்,*
*'வீட்டிலே பெண்கள் தலையில் ரிப்பனா?*
*வெள்ளைக்காரன் தான் உனக்கு அப்பனா?'*

என்றும் உணர்ச்சிப் பாவலன் காசி ஆனந்தனின் பாடல் வரிகளைத் தான் பாடவேண்டியிருக்கும்!

❖



# 5. விடுதலைக்குப் பின் தமிழின் நிலை

விடுதலை நாளின் பொன்விழா ஆண்டில் நாம் எல்லாத்துறையிலும் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பற்றி எண்ணிப் பார்க்கிறோம். தமிழ் மொழியின் நிலை குறித்தும் எண்ணிப் பார்த்த போது தோன்றிய கருத்துகளை 17–8–97 தெளிதமிழின் ஆசிரியவுரையாகப் பின் வருமாறு எழுதினேன் :

நம் நாடு விடுதலை பெற்று அரை நூற்றாண்டாகி விட்டது. எல்லாத் துறையிலும் நாடு எய்தியுள்ள முன்னேற்றங்களைக் கணக்கிட்டுப் பார்த்துப் பெருமைப்பட வேண்டிய காலம் இது. 1947க்கு முன் காடு மேடாக இருந்த நிலப்பகுதிகள் பல இன்று கழனிகளாக மாறியுள்ளன. அன்று இல்லாத பெரிய அணைக்கட்டுகள் இன்று எடுப்பாக எழும்பி நிற்கின்றன. அன்று குண்டூசியைக் கூட வெளிநாட்டிலிருந்து வருவித்த நாம் இன்று செயற்கைக்கோள் செய்து செலுத்துமளவுக்குத் தொழில் நுட்பத்தில் வளர்ந்திருக்கிறோம். அன்று பெரியம்மை முதலிய கொள்ளை நோய்கள் வந்து ஊரையே துடைத்துவிட்டுப் போயின. இன்று அவை கட்டுப்படுத்தப் பட்டுள்ளன. அன்று மண்ணெண்ணெய்க் காய் விளக்குகள் கண்ணைச் சிமிட்டிக் கொண்டிருந்த வீடுகளில் இன்று மின் விளக்குகள் ஒளி வெள்ளம் பாய்ச்சுகின்றன. அன்று வானொலியில் பாட்டுக் கேட்கப் பலகல் தொலைவு போனதுண்டு. ஆனால் இன்று

நாடோடிகளின் தோளில் கூட வானொலிப் பெட்டி தொங்குகிறது. பெரும்பாலான வீடுகளில் தொலைக்காட்சியும் தொலைபேசியும் இடம் பெற்றுத் தொலைவு என்னும் கருத்தையே பொய்யாக்கி வருகின்றன. படித்தவர் விழுக்காடு பாராட்டுமளவுக்கு உயர்ந்துள்ளது. எல்லாம் சரி. விடுதலைக்குப் பிறகு தமிழ் மொழியின் நிலை என்ன?

அன்று 6 ஆம் வகுப்பில் மட்டுமே எட்டிப்பார்த்த ஆங்கிலம் இன்று முன்மழலை வகுப்பிலேயே புகுந்து கொண்டு நம் குழந்தைகளை ஆங்கிலேயர்களாக வளர்த்து வருகின்றது.

தமிழ் நாட்டிலும் புதுச்சேரியிலும் ஆட்சி மொழி என்று பட்டங் கட்டப்பட்ட தமிழ் அன்னை 40 ஆண்டுக்கும் மேலாக ஆட்சிக் கட்டிலில் அமர இடங்கிடைக்காமல் நின்று கொண்டிருக்கிறாள். வெள்ளைக்காரன் காலத்தில் அரியணையில் அமர்ந்த ஆங்கில அணங்குக்கு இன்னும் நாம் அடித்தொண்டு செய்து வருகிறோம். ஆங்கிலத்தின் இடத்தில் தமிழா?—இன்றைய தமிழர்கள் இப்படி எண்ணிப் பார்க்கவே வெட்கப்படுகிறார்கள்?

அன்றைக்கு நல்ல தமிழில் எழுதிய எழுத்தாளர்களே இன்றைக்குத் 'தமிங்கிலத்தில்' எழுதுகிறார்கள். ஏனென்றால் இன்றைய தமிழர்க்கு அது தான் புரியுமாம். எழுத்தாலே பிழைப்பவர்கள் கூட மொழியைப் பற்றிக் கவலைப் படுவதில்லை, காசைப் பற்றித் தான் கவலை!

அன்றைய தமிழன் தமிழில் பேசினான். இன்றைய தமிழன் ஆங்கிலமும் தமிழும் சரிபாதியாகக் கலந்த ஓர் இரண்டுங் கெட்டான் மொழியில் பேசுகிறான். அவனால் அது தான் முடியும். சூழ்நிலை அப்படி.



இப்படியாகத் தானே நமது 'என்றுமுள தென்தமிழ்' நாளொரு But உம் பொழுதொரு So வுமாக மேளதாளத்துடன் செழித்து வளர்ந்து வருகிறது. இதில் யாருக்கும் வெட்கமில்லை! ஆள வந்தவர்களுக்கோ 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்பதே பேச்சு!

சோழ மன்னனுக்குப் பிறந்த நாள் விழா. அரண்மனை ஒட்டடையடித்துத் தூய்மை செய்து வண்ணந் தீட்டப்படுகிறது. விழா நாளில் ஊரே அல்லோல கல்லோலப்படுகிறது. அந்தணர்கள் அரசனிடம் பொன்னையும் பசுவையும் கொடையாகப் பெற்றுப் போகின்றனர். புலவர்கள் மலை போன்ற யானைகளை ஊர்ந்து செல்கின்றனர். எங்கும் உவகை பொங்கி வழிகிறது. ஆனால் அந்தோ! ஓரே ஒரு சிலந்திப்பூச்சி மட்டும் அவலக் கண்ணீர் வடிக்கிறது. எல்லோரும் தம்மிடம் இல்லாததைப் பெற்று மகிழ, சிலந்தி மட்டும் தன்னிடம் இருந்த தன் இருப்பிடமான கூட்டையும் [அரண்மனையை ஒட்டடையடித்ததால்] பறிகொடுத்து ஏங்கிக் கிடக்கிறது!

***அந்தணர் ஆவொடு பொன்பெற்றார்; நாவலர்***
***மந்தரம்போல் மாண்ட களிறூர்ந்தார்— எந்தை***
***இலங்கிலைவேல் கிள்ளி இரேவதிநாள் என்னோ***
***சிலம்பிதன் கூடிழந்த வாறு*** [முத்தொள்ளாயிரம்]

பொன் விழா ஆண்டில் தமிழின் நிலை இந்தச் சிலந்தியின் இரங்கத்தக்க நிலையை நினைவூட்டுகிறது.

விடுதலைக்குப் பிறகு நாடு பலதுறைகளில் வளர்ந்துள்ளது; சில துறைகளில் வளராமல் உள்ளது; மிகச் சில துறைகளில் தேய்ந்துள்ளது. எனினும் தமிழைப் போல் நம்பிக்கை இழக்குமளவுக்கு நலிந்து போகவில்லை. இப்படியே போனால் இன்னும் சில ஆண்டுகளில் தமிழே இல்லாமற் போகலாம்!

'தமிழ் இறந்தபின் தமிழ்மண் மட்டும் இருந்து ஏன்? மொழியன்றோ நாடு? மொழி இறந்துபடின் நாடும் இறந்துபடும் அன்றோ?"

என்ற திரு.வி.க. வின் பொன்மொழி இந்தப் பொன்விழா ஆண்டில் தமிழர்கள் எண்ணிப் பார்ப்பதற்கு ஏற்றது!

❖

17.8.97 தெளிதமிழில் வெளிவந்த ஆசிரியவுரை.



# 6. தமிழ் நெஞ்சங்களின் குற்றம்!

5.12.96 தினமணியில் 'ஆங்கிலத்தில் மருத்துவம், பொறியியல் கல்வி – பி.டி.ஆர். வலியுறுத்தல்' என்ற தலைப்பில் பின்வரும் செய்தி வந்தது :

'பொறியியல் மருத்துவம் போன்ற பட்ட வகுப்புக்கான பாடங்களைத் தமிழில் கற்றுக் கொடுக்க மேற்கொண்டு வரும் முயற்சி சரியானதல்ல. ஏனென்றால் இந்தப் பட்டங்களைப் பெற்ற தமிழர்கள் உலக அளவில் செயல்பட ஆங்கில அறிவு அவசியம் தேவை. 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்பதில் எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. தமிழில் பொறியியல் மருத்துவம் படித்தவர்கள் அனைவருக்கும் தமிழ் நாட்டில் வேலை கொடுக்க முடியாது. ஆனால் ஆங்கில அறிவு இல்லாமல் அவர்கள் வெளி மாநிலம் வெளிநாடு செல்ல முடியாது. நம்மவர்கள் உலகம் முழுவதும் சென்று புகழ் சேர்க்கின்றனர் என்றால் ஆங்கிலம் தான் காரணம். டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் எழுதிய மகப்பேறு மருத்துவம் பற்றிய புத்தகம் உருசிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு மருத்துவக் கல்லூரியில் பாடமாக உள்ளது. அதற்கு ஆங்கில அறிவே காரணம்'.

இந்தச் செய்தியைப் படித்த யான் 10.12.96 தெளிதமிழ் ஆசிரிய உரையாகத் 'தமிழ் நெஞ்சங்களின் குற்றம்' என்ற தலைப்பில் பின்வரும் கட்டுரையை எழுதினேன்:

இந்தச் செய்தி 'ஆங்கிலத்தில் மருத்துவம், பொறியியல் கல்வி, பி.டி.ஆர் வலியுறுத்தல்' என்ற தலைப்பில் 5.12.96 தினமணியில் வந்தது.

தமிழ்ப் பற்றுள்ளவர்கள் மேல் ஆங்கில ஆதரவாளர்கள் சுமத்தும் வழக்கமான, மலிவான குற்றச் சாட்டு, 'இவர்கள் ஆங்கிலத்தை அடியோடு விட்டு விடச் சொல்லுகிறார்கள்' என்பது தான். தமிழ்ப் பற்றாளர்கள் ஆங்கில வழியைத் தான் எதிர்க்கிறார்கள்: ஆங்கில மொழியை அன்று, ஐந்தாம் வகுப்புக்கு மேல் ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாக, கட்டாயமாக இருப்பதைக் கூட அவர்கள் எதிர்க்கவில்லை.

சட்டப்பேரவைத் தலைவர் ஆங்கிலத்தையும் தமிழையும் தம் இரு கண்களாகக் கருதலாம். ஆனால் அதற்காக 'ஆங்கிலம் படித்தால் அயல் நாடுகளில் வேலை கிடைக்கும்' என்று தவறான வழியைப் பரிந்துரைக்கக் கூடாது.

நம்மவர்கள் உலகம் முழுவதும் சென்று புகழ் சேர்ப்பதற்கு அவர்களின் நுண்ணறிவு தான் காரணம்; ஆங்கில அறிவன்று. ஆங்கிலத்திலேயே படித்து மருத்துவப் பட்டம் பெற்றுச் செல்வோரைக் கூடப் பிரான்சு, செருமனி, சப்பான் முதலிய மொழிப் பற்றுள்ளோர் நாடுகளில் மருத்துவர்களாக ஏற்றுக் கொள்வதில்லை. அந்நாட்டு மொழியைக் கற்றுத் தேர்ச்சி பெற்ற பிறகு தான் அவர்கள் அங்கே மருத்துவப் பணியாற்ற முடியும்.



உலகம் முழுவதிலும் ஆங்கிலம் இருக்கும்போது, உருசியாவில் மட்டும் மருத்துவர் இலட்சுமணசாமியின் ஆங்கில நூல் உருசிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுக் கற்பிக்கப்படுவது ஏன்? என்று அவர் எண்ணிப் பார்க்க வேண்டும்.

'சென்னை மருத்துவக் கல்லூரியில் அடுத்த (97–98) கல்வியாண்டிலிருந்து தமிழ் வழிக்கல்வி முறை தொடங் கப்படும். இது போலவே அண்ணா பல்கலைக் கழகத்தில் தமிழ் வழிப் பொறியியல் கல்வி அடுத்த ஆண்டு முதல் தொடங்கப்பட உள்ளது' என்று அமைச்சர் தமிழ்க்குடிமகன் தெரிவித்தார்
–இது 19–12–96 தினமணியில் வந்த செய்தி.

அமைச்சர் தமிழ்க்குடிமகனின் இந்த முயற்சியைத் தான் சட்டப் பேரவைத் தலைவர் பழனிவேல்ராசன் 'சரியானதல்ல' என்கிறார் இந்த இருவரின் கருத்துகளில் எது அரசின் கருத்து? என்று புரியாமல் குழம்பியிருந்தோம். முதல்வர் தெளிவு படுத்திவிட்டார்.

'பழனிவேல்ராசனின் இக்கருத்தில் தவறில்லை. தமிழக அரசின் இருமொழிக் கொள்கையின் அடிப்படையில் தான் பழனிவேல்ராசன் கருத்துத் தெரிவித்திருக்கிறார். எனக்குத் தமிழ்க்குடிமகனும் வேண்டும்; பழனிவேல்ராசனும் வேண்டும்' என்ற முதல்வர் கருணாநிதி இச்சர்ச்சை பற்றிக் கருத்துக் கூறியுள்ளார்' என்ற செய்தி 7.12.96 தினமணியில் வந்தது.

இது தி.மு.க வின் 'இருமொழிக் கொள்கை' இன்ன தென்று ஐயத்திற்கு இடம் இன்றித் தெளிவாக்கி விட்டது. இதன்படி மருத்துவம் பொறியியல் முதலிய உயர்கல்விகள்

ஆங்கிலத்தில் இருக்கும்; தமிழிலும் கொண்டு வர முயற்சி மேற்கொள்ளப்படும்.

7.12.95 தினமணியில் 'தமிழுக்கு ஆங்கிலம் அரணா? முரணா? என்ற தலைப்பில் முனைவர் தமிழ்க்குடிமகன் எழுதிய கட்டுரையில், 'ஆங்கிலப் பயிற்று மொழியும் தமிழோடு இணையாக (Parallel Medium) வரவேண்டும். வாய்ப்பும் தேவையும் உள்ளவர்கள் எதை வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கட்டும்' என்று எழுதியிருந் தார். மழலையர் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரையில் ஆங்கில வழியோடு, தமிழ் வழிக்கும் ஏற்பாடு செய்யப்படும் என்பது இதன் கருத்து.

இந்த ஏற்பாடு தமிழ் வளர்ச்சிக்கு எந்த அளவு பயன் விளைவிக்கும்? ஏற்கெனவே ஆங்கிலக் காதலில் அழுந்திக் கிடக்கும் தமிழ்மக்கள், ஆங்கிலம் எல்லா மட்டத்திலும் இணைப் பயிற்று மொழியாக இருக்கிறது என்றால், தமிழ் வழிப் பள்ளிகளுக்குத் தம் பிள்ளைகளை ஏன் அனுப்பப் போகிறார்கள்? ஆங்கில வழியில் படித்தால் தான் வெளிநாட்டிலும் வேலை கிடைக்கும் என்று அரசினரே பரப்புரை செய்யும் போது, பெற்றோர்கள் தம் பிள்ளைகளைத் தமிழ் வழியில் சேர்ப்பார்களா? 'தமிழ் வழி வகுப்பைத் தொடங்கினோம்; போதிய மாணவர் சேராததால் மூடி விட்டோம்' என்று கூறும் நிலை தான் இதனால் ஏற்படும். திருக்கோயில்களில் தமிழில் போற்றி [அருச்சனை] செய்யும் ஏற்பாடு என்ன ஆனது? வடமொழியிலும் போற்றி செய்ய வழி இருந்ததால் தமிழை யாரும் பொருட்படுத்தவில்லை. அந்த நிலை தான் தமிழ் வழிக் கல்விக்கும் நேரும். சுருக்கமாகச் சொன்னால், இப்போது உள்ள நிலையே எப்போதும் நீடிக்கும். தமிழ் மொழியைப் படிக்காமலேயே இங்கே உயர் கல்விப் பட்டங்களையும் பெறமுடியும் என்ற நம் தமிழ் நாட்டுக்கே உரிய தனிப் பெருமையும் தொடர்ந்து காப்பாற்றப்பட்டு வரும்!



தி.மு.க. அரசை நொந்து கொள்வதில் பொருளில்லை. அவர்கள் இருமொழிக் கொள்கைக்கு இரண்டகம் இல்லாமல் தான் நடந்து கொள்கிறார்கள். இந்த அரசு தமிழ் நாட்டில் தமிழே ஆட்சிமொழி, தமிழே கல்வி மொழி என்ற நிலையைக் கொண்டு வரும் என்று எதிர்பார்த்தது தமிழ்நெஞ்சங்களின் குற்றம்!

அமைச்சர்கள் சிலர் தம் பெயரைத் தமிழ்த்தலைப் பெழுத்துடன் மு. தமிழ்க்குடிமகன் என்பது போல் எழுதுகி றார்கள். சிலர் ஆங்கிலத் தலைப்பெழுத்துடன் பி.டி.ஆர். பழனிவேல்ராசன் என்பது போல் எழுதுகிறார்கள். இதற்கும் அவர்களின் இரு மொழிக் கொள்கை தான் அடிப்படையாய் இருக்கும் போலும்!

'தமிழக அமைச்சர்களிற் பெரும்பாலோர் ஆங்கிலக் குடிமகன்களாக நடந்து கொள்கிறார்கள். கோப்புகளில் கூட ஆங்கிலத்தில் தான் குறிப்பு எழுதுகிறார்களாம்' என்று முகம் [1.12.96] இதழ் கூறுகிறது. இதற்கும் இரு மொழிக் கொள்கையே இடந்தருவதாயிருக்கக் கூடும்!

இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆராய்ந்து தான் ஆட்சி மொழித்துறை முனைவர் தமிழ்க்குடிமகனிடம் விடப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் தம் கால்கள், இருமொழிக் கொள்கை, ஆங்கிலப் பித்தர்கள் என்ற இரண்டு இரும்புக் குண்டுகளோடு இணைக்கப்பட்டுள்ளன! அவற்றை இழுத்துக் கொண்டு அவரால் எவ்வளவு தொலைவு

நடந்து விட முடியும்?

மொழிக் கொள்கையின் அடிப்படையில் "தமிழ்க் குடிமகனும் வேண்டும்; பழனிவேல்ராசனும் வேண்டும்" என்று சொல்வது கலைஞர்க்குத் தக்கதாயிருக்கலாம். ஆனால் தம் குழந்தைகளுக்குத் தக்கது எது? தகாதது எது? என்பதைப் பொறுப்புள்ள பெற்றோர்கள் தாம் முடிவு செய்து கொள்ள வேண்டும்.

உலகத்தில் மொழியைத் தெய்வமாக வணங்கும் இனம், மொழிக்காக உயிரையும் கொடுக்கும் ஒரே இனம் என்ற தனிப் புகழைப் பெற்றுள்ள தமிழர்களே, உங்களுக்கு எது வேண்டும்? உங்கள் பிள்ளைகள் தமிழ்க்குடிமகன்களாக வளர்வதா? ஆங்கிலக் குடிமகன்களாக ஆவதா?

❖



# 7. இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ் இருக்குமா?

16.12.96 தெளிதமிழில் கொஞ்சங் கொஞ்சமாக அழிந்து கொண்டு வரும் தமிழின் நிலை குறித்துப் பின் வருமாறு ஆசிரியவுரை எழுதினேன் :

இன்றைய இதழ்களின் பெயர்கள் 'ஜூனியர் போஸ்ட்' 'சினிமா எக்ஸ்பிரஸ்' என்றாகி விட்டன. இப்படி ஆங்கிலப் பெயரில் மட்டும் 63 தமிழ் இதழ்கள் வந்து கொண்டிருக் கின்றன. அவற்றில் வரும் தலைப்புகள் : 'கவர் ஸ்டோரி' 'லைட்ஸ் ஆன்!' தமிழ்ப் பாடல்களின் தலைப்புகள் கூட Image, Fool என்று வருகின்றன. கதைகளில் காணப்படும் புதுமைத் தொடர்கள் : 'டெலிபோன் பெல் ரிங்கியது!' அவன் உடனே போனித்தான்! 'ஸ்பாஞ்ச்தனமான உள்ளங்கை [தமிழ் வினைச் சொற்களில் ஆங்கிலச் சொற்களே முதல் நிலைகள் ஆகிவிட்டதை நோக்குக.] 'The trend to day is ஒரே மூச்சில் படத்தை முடிப்பது' என்பது போன்ற புதுமைத் தமிங்கில நடை! [எழுவாய், செயப்படுபொருள் பயனிலை என்று வரவேண்டிய தமிழ்ச் சொற்றொடர் அமைப்பு முறைகூட மாறியிருப்பது கவனிக்கத் தக்கது.]

T.V. மலை [திருவண்ணாமலையின் சுருக்கமாம்!

திரு+வண்ணா என்று பிரிக்கப்பட்டிருப்பதைக் காண்க). 'M.M.A. சாலை' (மறைமலை அடிகள் சாலை! தனித் தமிழ்த் தந்தையின் பெயர் படும் பாட்டைப் பாருங்கள்.) 'T.V. நகர்' (திருவள்ளுவர் நகர்! எதிர்காலத்தில் இதுவே தமிழ்ப் பற்றுள்ளவர்களால் 'தொலைக்காட்சி நகர்' என்று மொழி பெயர்க்கப்பட்டு விடக்கூடும்!) இவை இடப் பெயர்கள்.

டி. கே. எம்., ஆர். எஸ். பி. இவை தமிழர் பெயர்களின் சுருக்கங்கள்! S.G. முருகன், M.T. வள்ளி –இவை ஆங்கிலத் தலைப்பெழுத்துடன் கூடிய தமிழர் பெயர்கள்!

தொலைக்காட்சியில் வரும் தமிழ் நிகழ்ச்சிகளின் தலைப்புகள் : Super Hit Show, Smile Please, Super Scenes!

தமிழ் நிகழ்ச்சிகளுக்கு இடையே தமிழர்களுக்காகச் செய்யப்படும் அறிவிப்புகள் : This part of the programme is brought to you by Marcopolo, Episode - 5. – இப்படி.

தமிழ்த் திரைப்படங்களின் பெயர்கள் : 'லவ் பேர்ட்ஸ்' 'டூயட்', 'ஜென்டில்மேன்' – இப்படி.

"பெரிய கடைத் தெருவுக்கு எப்படிப் போவது?" என்று கேட்டால் "ஸ்ட்ரைட்டா போய், ரைட்ல கட் பண்ணி, ரவுண்டாணா வந்ததும் லெப்ட்ல கட் பண்ணுங்க" என்பது ஆங்கிலம் படிக்காத தமிழன் கூடச் சொல்லும் விடை!

படிப்பறிவே இல்லாதோர் நடத்தும் தேநீர்க் கடையில் கூட 'மட்டன், சிக்கன், ஆம்லட், மீல்ஸ் ரெடி!' – இப்படி



அறிவிப்புப் பலகை.

மூச்சுக்கொரு முறை So, But, O.K. என்று படித்தவர்கள் தமிழ் பேசுவது இயல்பாகி விட்ட நிலை! (அதனால், ஆனால், சரி என்ற தமிழ்ச் சொற்கள்; இதனால் மெல்ல மறைந்து வருகின்றன)

தமிழறிஞர்களே, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?

*"கேட்ட வரமளிக்கும் கீர்த்தியுள்ள தெய்வங்காள்!*
*கூட்டோடே எங்கே குடிபோனீர்?" – "பாட்டாகேள்,*
*செல்காலம் எல்லாம் செலுத்தினோம் அல்காலம்*
*கல்லானோம் செம்பானோம் காண்!"*

என்று அன்று வினாவிடையாகப் பாடினான் காளமேகம். அவன் இன்றைக்கிருந்தால்,

*நாட்டில் தமிழ்வளர்க்கும் நல்ல அறிஞர்களே*
*கூட்டோட எங்கே குடிபோனீர்?*

என்று தான் கேட்பான்!

தமிழ் சிறிது சிறிதாகச் செத்துக் கொண்டு வருகிறது. தக்க மருத்துவம் பார்க்காமல் வாழ்த்துப் பாடிக் கொண்டிருந்தால் தமிழ் பிழைக்காது.

*ஒரு பாதி மால் கொள மற்றொரு பாதி உமையவள் கொண்(டு)*
*இருபாதி யாலும் இறந்தான் புராரி*

என்று புலவன் ஒருவன் பாடினான். அதைப் போலவும், 'வாதம் கெடுத்தது பாதி; வண்ணான் கெடுத்தது பாதி' என்ற பழமொழியைப் போலவும் ஏற்கெனவே வடமொழி,

உருது, இந்தி, போர்ச்சுகல் முதலிய மொழிகளால் ஒரு பாதித் தமிழ் அழிய எஞ்சியிருக்கும் மறுபாதியையும் ஆங்கிலம் தின்று தீர்த்து வருவது உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா? அல்லது தலைக்கு மேலே போய் விட்டது; இனிச் சாண் போனால் என்ன? முழம் போனால் என்ன? என்று விட்டு விட்டீர்களா?

கண்ணெதிரில் நடக்கும் இந்த அட்டூழியங்களைப் பற்றிப் பொறுப்புள்ள உங்களால் எப்படி 'யார் வீட்டு இழவோ' என்று இருக்க முடிகிறது?

ஏதாவது செய்ய முன் வாருங்கள். இயலாவிட்டால் இது பற்றி எழுதுங்கள். அதுவும் இயலாவிட்டால் பேசுங்கள். இல்லாவிட்டால் இவற்றையெல்லாம் நீங்கள் ஏற்றுக் கொள்ளுகிறீர்கள் என்று மக்கள் எண்ணிக் கொள்வார்கள்.

தமிழறிஞர்களே, இன்னும் எத்தனை நாளைக்குக்

***கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடி***

என்று மேடையேறிப் பீடு பேசிக் கொண்டிருக்கப் போகிறீர்கள்? அப்படிப் பேசுவதற்கும் அதை மக்கள் புரிந்து கொள்வதற்கும் தமிழ்மொழி என்று ஒன்று எதிர்காலத்தில் இருக்குமா?

நிலைமை இப்படியே நீடித்தால், மெல்லத் தமிழ் இனிச் சாகும் என்று சொன்னதாகப் பாரதியார் குறித்த அந்தப் பேதை உண்மையிலேயே மேதையாகி விடுவான்!



மேற்கண்ட ஆசிரியவுரையின் விளைவாகச் சில மடல்கள் வந்தன. அவை 16.12.96 தெளிதமிழில் வெளியிடப்பட்டன. அவை வருமாறு:

0. இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ் இருக்குமா என்பது ஐயமே! ஏனெனில் தமிழ்நாட்டில் தமிழ்க்குப் பகைவர் மிகுந்து வருகின்றனர். அவர்களைத் தட்டிக் கேட்கத் தமிழர்க்குத் துணிவில்லை. அவர்களிடம் தமிழ்நாட்டுப் பெரும்பான்மையான செய்தி ஏடுகள் உள்ளன. எழுத்தாளர்களாக இருப்பவர்களும் அவர்களே. வானொலி தொலைக்காட்சி நிலையங்களும் அவர் களிடமே உள. தமிழர் தலைவர் என்பார் பலரும் தமிழ்ப் பகைவர்களுக்கு அடிமைகளே! தமிழக அரசு அஞ்சி அஞ்சிச் செய்யும் சில தமிழ் வளர்ச்சிப் பணிகளை எதிர்ப்பவரும் தமிழ்ப் பகைவர்களும் அவரின் அடிவருடித் தமிழர்களுமே! எங்கனமையா தமிழ் இனி இருக்கும்?

– திருத்துறைக்கிழார், மன்னார்குடி.

0. இவ்வளவு இழிவுக்கும் யார் காரணம்? மக்களா? இல்லை; அரசே. தமிழன் தமிழில் படிக்க வழிவகை செய்யாதவர் யார்? தமிழ் வழியில் படித்தால் வேலை வாய்ப்பு உண்டா? இல்லாத ஏமாற்றத்தால் தானே குப்பனும் சுப்பனும் ஆங்கில மழலையர் வகுப்பில் இடம் தேடி அலைகிறார்கள்?

புதுச்சேரியை எப்போது ஆங்கிலேயன் ஆண்டான்? யார் ஆட்சியில் இங்கே ஆங்கிலம் வந்தது? பிரஞ்சுக்காரன் ஆண்ட போது கூடப் பணத்தாளில் தமிழ் எண்ணும் எழுத்தும் இருந்தனவே! தமிழ் மண்ணில் உள்ள புதுவைப் பல்கலைக் கழகத்தின் சின்னத்தில் தமிழ் உள்ளதா? 'அதில் செத்த மொழியை யார் சேர்த்தது?

தமிழ்க்குக் குரல் கொடுக்கும் தினமணியில் Sarvatra vijayam ஏன்? எத்தனையோ பேர் எதிர்த்தும் அது மாற்றம் பெறவில்லையே, ஏன்?

'தமிழினத் தலைவரின் குடும்பத் தொலைக்காட்சியில் Song: Pulveli, Film : Aasai, Music : என்று ஆங்கில அறிவிப்பு வருகிறதே மக்கள் என்ன மடையர்களா?

புதுச்சேரியைப் 'பாண்டிச்சேரி' என்றும், நாவரசை 'நவரசு' என்றும் வேண்டுமென்றே எழுதும் தினமலர்க்குத் தானே அரசு விளம்பரங்கள் அத்தனையும் கிடைக்கின்றன!

ஆங்கிலேயனும் பிரஞ்சுக்காரனும் நாட்டைத்தான் அடிமைப்படுத்தினான்; தமிழைக் கெடுக்கவில்லை. ஆட்சி அதிகாரம் உண்மைத் தமிழனிடம் கிடைத்தால் தான் இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ் இருக்கும்.

—புலவர் சி. வெற்றிவேந்தன், பாகூர்.

0. 'மெல்லத் தமிழினிச்சாகும்' என்று சொன்ன பேதை ஒருவன் மட்டுமே பாரதிகாலத்தில் இருந்திருக்கிறான். இன்றோ பல்லாயிரம் பேதைகள் தமிழைச் சாகடிக்கும் செயலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தொகை வளர்ந்து கொண்டும் வருகிறது. புலவர் குழு உள்ளிட்ட தமிழறிஞர்களும் தமிழைக் கைவிட்டனர். இவர்கள் அரசியல் தலைவர்களின் புகழ் பாடித் தம் நிலையை உயர்த்திக் கொள்வதில் தான் தளரா முயற்சி செய்கின்றனர். சில நேரங்களில் தமிழ்ப் பற்றுள்ளவர் போல் நடிக்கின்றனர். தமிழகத்தில் தமிழை ஆட்சி மொழியாக்கு என்று பேச அஞ்சித் "தில்லியில் ஆட்சி



மொழியாக்கு" "செம்மொழியாக்கு" என்று குரல் கொடுத்து அடுத்துக் கெடுக்கும் இவர்கள், சோ போன்ற புறப்பகைவரைக் காட்டிலும் கொடுமையானவர்கள். ஆங்கிலப் பள்ளிகளின் வளர்ச்சியில் பைகளை நிரப்பி வயிறு வளர்க்கும் அரசியல், தமிழை வளரவிடாது.

ஆங்கிலம் தமிழ் நாட்டு மொழியாக, தமிழன் வீட்டு மொழியாக வேண்டும் [விடுதலை அறிக்கை 27.1.1969] என்ற தலைவரின் மரபில் வந்து அவருடைய பிற உயர்ந்த கொள்கைகளைக் கடைப்பிடிக்காவிட்டாலும், மொழிக் கொள்கையை நிறைவேற்றித் தமிழை அழித்து வருவோர் தமிழை வளர விடுவரா? "நான் மேடையில் தமிழ் பேசுவேன்; வீட்டில் ஆங்கிலம் பேசுவேன்" என்போர் தமிழை வளர விடுவார்களா? "தமிழனை அழித்துத் தமிழை வளர்ப்போம்" எனக் கிண்டல் செய்து தாக்கிய சோவை ஒரு வாரத்தில் மகிழ வைத்தவர்கள் தமிழை வளர விடுவார்களா? ஆனாலும் மனந்தளராது இன்று சிறுபான்மையினராக உள்ள உண்மைத் தமிழறிஞர்களும் தமிழுணர்வு கொண்டோரும் சிறு தீ பெருந்தீயாக வாய்ப்புண்டு என்ற தன்னம்பிக்கையுடன் ஆங்கில எதிர்ப்புணர்வைத் துடிப்பான இளந்தலைமுறையினரிடம் வளர்த்துப் போராட்ட உணர்வைத் தூண்ட வேண்டும். பெரும் புரட்சியும் ஈகமும் செய்தால் தான் தமிழைக் காப்பாற்ற முடியும்.

— புலவர் மா. சின்னு, வேலூர் [சேலம்]

❖

# 8. தார் பூசும் போராட்டம் தமிழுக்காக அன்று; தமிழனுக்காக.

ஆங்கில எழுத்துகளைத் தார்பூசி அழிக்கும் மரு. இராமதாசின் போராட்டம் விவேகமானதா?

'ஆங்கிலம் தமிழ் இரண்டும் விளம்பரப் பலகைகளில் இருந்தால் என்ன?'

மேற்கண்ட இரண்டு வினாக்களும் 29.6.97 தினமணிக் கதிரில் கேட்கப்பட்டுள்ளன. இவற்றிற்கான 'மனிதன் பதில்களில்',

'இந்தி எழுத்துகளை அழித்தது போல ஆங்கில எழுத்துகளை அழித்தது பொருத்தமற்றது. துணை மொழியாக நாம் ஆங்கிலத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அழிப்பு நமது உணர்வுகளின் உச்சத்தை வெளிப்படுத்தும் வழி எனினும், அதனினும் சிறந்தது பெரிய எழுத்துகளில் தமிழ் இல்லாத இடங்களில் தமிழ்ப்பெயரை எழுதும் போராட்டமாகும்' என்று விடை கூறப்பட்டிருக்கிறது.



இந்த வினாக்களிலும் விடைகளிலும் ஆங்கிலத்தின் மேல் நம்மவர்க்குள்ள அடிமைத் தனமான அக்கறைதான் வெளிப்படுகிறது. முதல் வினாவை வினவியவர்க்கு, 'பதினைந்து ஆண்டுகளாகச் சட்டம் இருந்தும் அதை மதிக்காமல் இருப்பது விவேகமானதா?' என்று கேட்கத் தோன்றவில்லை. 'தமிழகத்தில் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு ஓராண்டுக் காலத்தவணை கொடுத்தும் பெயர்ப் பலகையை அரசாணைப்படி எழுதாமலிருப்பது விவேகமானதா?' என்று கேட்கத் தோன்றவில்லை. இரண்டாம் வினாவை வினவியவர்க்குப் பெயர்ப்பலகைச் சட்டம் இன்னது என்றே தெரியாதோ என்ற ஐயம் எழுகிறது. பெயர்ப்பலகையில் ஆங்கிலம் இருக்கலாம் என்றே சட்டம் கூறுகிறது. மரு. இராமதாசும் ஆங்கிலமே இருக்கக்கூடாது என்று அதனை அழிக்கவில்லை. சட்டம் கூறுகிறபடி இல்லாமல் தமிழ்க்குரிய முதல் இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்த ஆங்கிலப் பெயரைத்தான் அவர் தார்பூசி அழித்தார்; தமிழுக்கடியில் அதைவிடச் சிறியதாக எழுதியிருக்கும் ஆங்கிலப் பெயரை அவர் அழிக்கவில்லை.

இனி இவற்றிற்குக் கூறப்பட்ட விடையைக் காண்போம்: 'இந்தியை அழித்தது பொருத்தமற்றது' என்று மனிதன் கூறுவது எப்படி? இந்தியைத் தமிழ்நாடு எதிர்ப்பதால் அதை அழித்தது தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் பொருத்தமானது என்றே வைத்துக் கொண்டாலும், ஆங்கிலத்தை அழித்தது எப்படிப் பொருத்த மற்றதாகும்? தமிழ் முதல் மொழி; ஆங்கிலம் துணை மொழி என்று விடையில் கூறியபடியே பார்த்தாலும், துணை மொழியை முதல் மொழிக்கு மேலே எழுதுவது எப்படி முறையாகும்? அரசன் அமர வேண்டிய உயர்ந்த அரியணையில்

அமைச்சன் ஏறி அமர்ந்து கொண்டால், 'அவனை ஒன்றும் செய்யாமல், அவனுக்குக் கீழே அரசனைப் பெரிய இருக்கையாகப் போட்டு அமர்த்துவதே முறையானது' என்று சொல்வது போல உள்ளது இது!

'தமிழ் எழுத்துச் சிறியதாக இருந்தால் பெரிய எழுத்தாக எழுதுவதே சிறந்தது, என்று கூறும் மனிதனும் பெயர்ப்பலகை ஆணையை 'ஒன்று குத்தலா'கவே புரிந்து வைத்திருப் பதாகத் தெரிகிறது. ஆணை கூறுவது இது தான்: தமிழுடன் ஆங்கிலத்திலும் பிறமொழியிலும் எழுத விரும்பினால் அம்மொழிகளின் எழுத்துக்கள் முறையே 5:3:2 என்ற தகவில், மேலே தமிழும் அதன் கீழ் ஆங்கிலமும் அதன் கீழ்ப் பிறமொழியும் அமைய வேண்டும். தமிழுக்கு மேலிடம் என்பதும், பெரிய எழுத்து என்பதும் அதன் முதன்மையைக் காட்டுவனவாகும்.

பெயர்ப்பலகை ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்பட் டிருந்தால் பெரிய எழுத்துகளில் தமிழை எங்கே எழுதுவது? ஆங்கிலத்துக்கு மேல் அதற்கான இடம் இருக்குமா? அல்லது அதைவிடப் பெரியதமிழ்ப் பெயர்ப்பலகையை எழுதிக் கொண்டு வந்து மேலே அமைக்க வேண்டுமா? அல்லது 6 அங்குல உயர ஆங்கில எழுத்தின் அடியில், 3 அங்குல உயரத் தமிழ் எழுத்து எழுதியிருந்தால் தமிழ் எழுத்துகளை அழித்து விட்டு அங்கே 10 அங்குல உயரத்தில் தமிழ் எழுத்தை எழுத வேண்டுமா? அதற்கு அவ்விடம் போதுமா? ஆங்கிலம் அனைத்துக்கும் மேலே எப்போதும் போல் இருக்க வேண்டும்; தமிழை மட்டும் அழித்தெழுத வேண்டுமா? அது தான் சிறந்த போராட்டமா?

ஆங்கிலத்தில் கையெழுத்துப் போடும் தமிழன் தன் தாய்மொழி என்ன? என்று எண்ணிப் பார்ப்பதில்லை.



M.K. முருகன், T.R. பொன்னன் என்று ஆங்கிலத்தலைப் பெழுத்தைப் போடும் தமிழன், நம் அப்பன் ஆங்கிலேயனா? என்று நினைத்துப் பார்ப்பதில்லை. Doctor's என்றும், Episode-25 என்றும் தமிழ் நிகழ்ச்சிகளுக்குத் தொலைக் காட்சியில் தலைப்புப் போடும் தமிழனும், பார்க்கும் தமிழனும் அதை இயல்பானதாகவே கருதுகிறார்கள். இவை யாவும் கெட்டிச் சாயமாகத் தமிழனின் அடிமனத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் ஆங்கில அடிமைத் தனத்தின் வெளிப்பாடுகளே. அந்த வெளிப்பாடு தான் மேற்கண்ட வினாக்களும் விடையும்.

புதுச்சேரியிலும் 'மேலே தமிழ்; கீழே அதன் பிற மொழிபெயர்ப்பு' என்பது தான் பெயர்ப்பலகை ஆணை. ஆனால், அதை நடைமுறைப்படுத்தும் பொறுப்புடைய தொழிலாளர் துறையின் பெயர்ப்பலகையிலேயே மேலே Labour Department; கீழே 'தொழிலாளர் துறை'தான். ஆங்கிலேய ஆண்டைக்குக் கூனிக் குழைந்து கும்பிடு போட்டே குறுகிப் போன குள்ள மனங்களுக்கு இவை குறைகளாகத் தெரிவதில்லை!

மருத்துவர் இராமதாசு செய்தது சட்டத்தை மீறிய போராட்டமன்று; சட்டத்தைப் பாதுகாக்கும் போராட்டம். சட்டத்தை மீறுவோரைத் தக்கபடி ஒறுக்கும் பொறுப்புள்ள செயல்; செய்ய வேண்டியவர்கள் செயலற்று இருக்கும் நிலையில் "சட்ட மீறலைச் சுட்டிக் காட்ட நான் இருக்கிறேன்" என்று மார்தட்டி வந்த மகனாகிய மரு. இராதாசின் உண்மைத் தமிழ்ப்பற்றைக் கண்டு உவகைக் கண்ணீர் பெருக்குகிறாள் தமிழன்னை.

ஏ தமிழா, நீ தமிழை மதிப்பது தமிழுக்காக அன்று; உனக்காக. தமிழ் அழிந்தால் நீ அழிவாய்; தமிழ் இல்லை என்றால் தமிழன் இல்லை; தமிழ் நாடும் இல்லை. என்ன தான் நீ ஆங்கிலேயனைப் போல் எழுதினாலும், பேசினாலும், உடுத்தினாலும், ஒப்பனை செய்து கொண்டாலும், உன்னை அவன் ஒரு காலும் ஆங்கிலேயனாக ஏற்றுக் கொள்ளமாட்டான்!

தமிழா, உனக்குத் தாய்மொழிப்பற்று இல்லாமற் போனால் போகட்டும். குறைந்த அளவு சட்டத்தை மதிக்கும் நல்ல குடிமகனாகவாவது வாழக் கற்றுக் கொள். உலகம் உன்னை ஓரளவாவது மதிக்கும்.

❖



# 9. தமிழ் ஆட்சிமொழி - புதுச்சேரியில்

தமிழ்நாட்டைப் போலவே புதுச்சேரியும் தமிழ் நிலப்பகுதியே. தமிழ் நாட்டில் தமிழே ஆட்சிமொழி என்று 1956 இல் செய்யப்பட்ட சட்டம் இன்னும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அது போலவே புதுச்சேரியில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டமும் இன்னும் நடைமுறைப்படுத்தப் படவில்லை. தமிழ் நாட்டிலாவது 'தமிழ் வளர்ச்சி இயக்ககமும் கிளைகளும் அமைத்து அது தொடர்பான சில பணிகளையேனும் ஆற்றி வருகிறார்கள். ஆனால் புதுச்சேரியில் அப்படி ஒன்றும் இல்லை.

அப்படியானால் இன்று எந்த மொழியில் தான் இங்கே ஆட்சிப் பணிகள் நடந்து வருகின்றன? ஆங்கிலத்தில், ஏன்? தமிழ்நாட்டிலாவது ஆங்கிலத்தில் நடப்பதற்குப் பொருத்தமான தொரு காரணம் கூறமுடியும். தமிழ்நாட்டு மக்கள் மெக்காலேயின் ஆங்கில அடிமைக் கல்வி முறையில் ஊறிப்போனவர்கள். ஆங்கிலமே அறிவு மொழி என்ற மனப்பான்மை அவர்கள் உள்ளத்தில் கெட்டிச் சாயமாக ஒட்டிக் கொண்டுள்ளது. 'வாலி போய்விட்டான்;

இன்னும் வால் போகவில்லை' என்பது போல், 'ஆங்கிலேயன் போய்விட்டான்; இன்னும் ஆங்கிலம் போகவில்லை' என்ற நிலை அங்கே நீடிக்கிறது. இது நீடிக்கும் வரை தமிழ் நாட்டில் ஆட்சிமொழிச் சட்டம் ஏட்டுச் சுரைக்காயாகவே இருந்து கொண்டிருக்கும்.

ஆனால் புதுச்சேரியில் ஆங்கிலம் எப்படி ஆட்சி மொழி ஆனது? இந்த மண்ணை முன்னே ஆங்கிலேயர் ஆண்டார்களா? இப்போதாவது ஆங்கிலேயர்கள் ஆள்கிறார்களா? இல்லை. அப்போது பிரஞ்சுக்காரர்கள் ஆண்டார்கள்! அவர்கள் போன பிறகு இப்போது தமிழர்களே ஆள்கிறார்கள். பிரெஞ்சுக்காரர்கள் போய் 43 ஆண்டுகள் ஆன இன்றும், இந்த மண்ணின் மொழிக்கு ஆட்சி மொழியாகும் தகுதி வரவில்லை என்று வைத்துக் கொண்டாலும், இன்று இங்கே பிரஞ்சு மொழியிலேயே ஆட்சிப்பணிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் பிரஞ்சு காலி செய்துவிட்டுப் போன ஆட்சிக் கட்டிலில் ஆங்கிலம் ஏறி அமர்ந்து கொண்டிருக்கிறதே அது எப்படி? ஆங்கிலத்துக்கும் புதுச்சேரி மண்ணுக்கும் என்ன தொடர்பு? எங்கிருந்து வந்தது இந்த ஆங்கிலம்?

இங்கே ஆங்கிலத்தைக் கொண்டு வந்தது இந்திய அரசே. பிரஞ்சுக்காரரிடம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நடுவணரசு ஆங்கிலம் படித்த அலுவலர்களை அனுப்பி இந்த மண்ணை ஆளச்செய்தது. அவர்கள் தமக்குத் தெரிந்த ஆங்கில மொழியால் ஆட்சியை மேளதாளத்துடன் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்! மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட அரசு என்ன செய்கிறது? என்று கேட்கிறீர்களா? புதுச்சேரியானது நடுவணரசின் நேரடிப்பார்வையில் ஆளப்படும் ஒன்றியப் பகுதியாய் உள்ளது. அதில் மக்களாட்சி, தேர்தல், சட்டமன்றம்,



அமைச்சர்கள் என்பதெல்லாம் ஒப்புக்குத் தான்! உண்மையில் ஆட்சி செய்வோர் துணை நிலை ஆளுநரும், செயலர்களுமே, அமைச்சர்கள் விருப்பங்களைச் செயலர்கள் மதிப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. அப்படி மதிக்காதவர்களை அமைச்சர் களால் ஒன்றும் செய்ய முடியாது. பெரும்பாலான அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தமிழ் உணர்வும் இல்லை. அவர்களில் தமிழுக்கு எதிரானவர்களும் இருக்கிறார்கள்!

இங்கே ஆளுநரும் செயலர்களும் தமிழ் ஆட்சி மொழியாவதற்குத் தடையாக இருப்பதற்கு என்ன காரணம் என்றால், அவர்களில் பெரும்பாலோர் தமிழே தெரியாத வெளிமாநிலத்தவர். இங்கே அனுப்பப்படுவதற்கு முன் அவர்களுக்குத் தமிழ் கற்பிக்கப்படுவதும் இல்லை. வந்த பின் அவர்களுக்கு ஆட்சிமொழி கற்பிக்கப்படுவதும் இல்லை; கற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. அப்படிப்பட்டவர்களால் எப்படித் தமிழில் அலுவல் செய்ய முடியும்? எழுத்தர்கள் தமிழில் கோப்பு அனுப்பினால் செயலர்கள் அதை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? அதனால் தான் இந்த மண்ணின் ஆட்சி மொழிச் சட்டத்தை அவர்கள் கண்டு கொள்வதில்லை. தமக்குக் கீழ்ப்பணி செய்ய வேண்டிய எழுத்தர்களுக்கு ஆங்கிலம் எழுதத் தெரிகிறதா? ஆங்கிலத் தட்டச்சுத் திறன் உள்ளதா! என்று பார்த்துத்தான் தேர்வு செய்கிறார்கள். ஆட்சிமொழியாகிய தமிழ் தெரிகிறதா? தமிழ்த் தட்டச்சுச் சான்றிதழ் இருக்கிறதா என்று பார்ப்பதில்லை. தமிழ் தெரியாதவர்கள் கூட இந்த எழுத்தர் பணித்தேர்வில் வெற்றி பெற்று இங்கே வேலை பெற முடியும். எங்கோ இருந்து வந்த வெளிமாநிலத்து இளைஞர்கள் இங்கே வேலை பெற முடியும். ஆனால் ஆங்கிலத்தில் வன்மை இல்லாவிட்டால் இந்த

மண்ணின் மைந்தர்கள் இங்கே வேலை பெற முடியாது. இதைப் பற்றியாரும் கவலைப்படுவதும் இல்லை, ஆளும் கட்சியை எதிர்ப்பதற்காக ஏதாவது ஒரு சொத்தைக் காரணத்தைத் தேடிக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சிக்காரர்கள் கூட இதுவரை ஆட்சி மொழிச்சட்டத்தை நடைமுறைப்படுத்த இந்த அரசு என்ன செய்தது? என்று கேட்டதில்லை! வெள்ளைக்காரர்களின் ஆட்சிமுறை வெளியேற்றி விட்டதாக மார்தட்டிக் கொள்ளும் விடுதலை மறவர்கள் கூட "நம் குழந்தைகள் ஆங்கில மொழி வழியில் படிப்பதே அழகு" என்று பெருமையோடு பேசுகிறார்கள்!

என்று தெளியும் இந்த ஆங்கில மயக்கம்? என்று நம் தாய்மொழி அரியணை ஏறும்? ஆட்சி மொழிச் சிக்கல்களுக்குத் தீர்வு காண எத்தனையோ அரிய கருத்துகள் அறிஞர்களால் பரிந்துரைக்கப்படுகின்றன. எனினும் யாரும் அவற்றைக் காதில் போட்டுக் கொள்வதில்லை. அது மக்களின் சிக்கலாக மாறி நடுத்தெருவுக்கு வந்தால் தான் ஆட்சியாளர்கள் "அது என்ன?" என்று கேட்பார்கள். மக்கள் அதைப் புரிந்து கொள்ளவும் இல்லை, ஆங்கிலத் திறன் குறைந்ததால் தம் மக்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்று ஆறுதலடை கிறார்களே ஒழிய, தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக இருந்தும், தமிழில் திறன் படைத்த தம் மக்களுக்கு ஏன் வேலை கிடைக்கவில்லை? என்று யாரும் எண்ணிப் பார்ப்பதேயில்லை. தமிழ் மொழி தமிழறிஞர்களின் மொழி; மற்றத் தமிழர்களின் மொழி ஆங்கிலமே என்ற மனப்பான்மையே எங்கும் பரவியுள்ளது. மெத்தப் படித்தவர்கள், அமைச்சர்கள், ச.ம.உ.க்கள் எல்லாமே இந்த மனப்பான்மையினரே. அதனால் தான் அவர்கள் தம் பெயர்க்கு முன் எழுதும் தலைப்பெழுத்தை



T.R., S.K., P.M. என்று ஆங்கிலத்தில் போட்டுக் கொள்கிறார்கள்; முகவரிகளை ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள்; கையழுத்தை ஆங்கிலத்தில் போடுகிறார்கள். தொலைபேசி எண்களை, நாள்களை, கிழமைகளை ஆங்கிலத்தில் சொல்கிறார்கள். இவர்களைப் பார்த்து எழுதப் படிக்கத் தெரியாதவன் கூட P. பழனி என்பது போல ஆங்கிலத் தலைப்பெழுத்துடன் கையெழுத்துப் போடக் கற்றுக் கொள்கிறான்!

வேண்டுமென்றே மனத்தை இறுக்கமாய் வைத்துக் கொண்டிருக்கும் அரசு உயர் அலுவலர்களுக்கும் அமைச்சர் களுக்கும் வேண்டுகோள் விடுப்பதையும், நகர்ப்புறங்களில் அரசை எதிர்த்துப் போராட்டங்கள் நடத்துவதையும் விட்டு விட்டுத் தமிழறிஞர்கள் நாட்டுப்புற மக்களிடம் செல்ல வேண்டும்; தாம் தமிழர்கள் என்ற உணர்வை மக்களிடம் உண்டாக்க வேண்டும். அதற்கு முதற்படியாக அவர்களைத் தமிழில் ஒப்பமிடச் செய்ய வேண்டும். தமிழில் ஒப்பமிட்டால் தான் தமிழன் என்ற உணர்வு வரும். அப்படி வளர்ந்த தமிழர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும், தமிழ் உணர்வுள்ளவர்களே வரும் நிலை ஏற்படும். தமிழ் உணர்வுள்ள தமிழர்கள் ஆட்சிக்கு வந்தால் தமிழ் எந்தச் சிக்கலும் இன்றித் தமிழ் எளிதாக ஆட்சி மொழியாகும். இல்லாவிட்டால் இன்று மட்டுமன்று; என்றுமே ஆங்கிலம் தான் தமிழ் மண்ணின் ஆட்சி மொழியாக இருக்கும்.

❖

# 10. அரியணையில் அமரமுடியாத அன்னை

1996 நவம்பர் 3, 4, 5 ஆம் நாள்களில் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில், தமிழ் ஆட்சி மொழி; சிக்கல்களும் தீர்வுகளும் என்ற பொருளில் கருத்தரங்கம் ஒன்று நிகழ்ந்தது. அதில் நான் கலந்து கொண்டு மேற்கண்ட தலைப்பில் வழங்கிய கட்டுரை வருமாறு :

## புதுச்சேரியில் ஆங்கிலம் எப்படி ஆட்சிமொழி ஆனது?

ஒரு நிலப்பகுதியை அண்டுவந்த அயலார் வெளியேறும் போது அதன் ஆட்சியுரிமை அங்கு வாழும் மக்களின் கைக்கு வருவதும், அவர்களின் மொழி ஆட்சி மொழியாவதும் இயல்பானவை. வியட்நாமிலிருந்து பிரஞ்சுக் காரர் வெளியேறிய பின், பிரஞ்சு மொழி ஒழிக்கப்பட்டு வியட்நாமிய மொழி ஆட்சி மொழியானதை இதற்குச் சான்றாகக் காட்டலாம்.[1] ஆனால் புதுச்சேரி யிலிருந்து பிரஞ்சுக்காரர் வெளியேறி 42 ஆண்டுகள் ஆன பின்னும் அப்பகுதியின் பெரும்பான்மை மக்களின் மொழியாகிய தமிழும், சிறுபான்மை மக்களின் மொழிகளாகிய மலையாளமும் தெலுங்கும் இன்னும் ஆட்சிக் கட்டிலில் அமர முடியவில்லை.



இம்மக்களுக்கு எவ்வகையிலும் தொடர்பில்லாத ஆங்கிலமொழி இன்று அரியணையில் அமர்ந்து கோலோச்சுகிறது. இது எப்படி?

மக்கள் மொழிகளாகிய தமிழ் மலையாளம் தெலுங்கு மொழிகள் ஆட்சி மொழியாகும் அளவு வளர்ச்சி பெறவில்லையென்றால் கூட, அப்படி வளர்ச்சி பெறும் வரையில் பிரஞ்சுமொழியே தொடர்வது தான் இயல்பு. அப்படியின்றிப் பிரஞ்சுக்காரரிடத்திலிருந்து ஆங்கிலேயர் பிடித்துக் கொண்டது போல் இப்பகுதியை அன்று முதல் இன்று வரை ஆங்கிலம் ஆண்டு வருவதன் காரணம் என்ன? இதற்குக் காரணம், பிரஞ்சுக்காரர் வெளியேறிய போது இப்பகுதியின் ஆட்சியுரிமை, இங்கு வாழும் மக்கள் கையில் தரப்படாமல் ஆங்கிலேயர் ஆட்சி முறையில் பழக்கப்பட்ட இந்திய ஆட்சியாளர்கள் கையில் கொடுக்கப்பட்டதே.

1954 இல் ஏற்பட்ட இணைப்பு உடன்படிக்கையில் கூட ஆட்சிமொழி குறித்து மக்கள் முடிவு செய்யும் வரையில் பிரஞ்சே ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று தான் உள்ளதே தவிர, ஆங்கிலத்துக்கு அதில் எந்த அளவும் இடமளிக்கப்படவில்லை.[2]

## புதுச்சேரியின் ஆட்சிமொழி ஐந்தா?

கடந்த 42 ஆண்டுகளாகப் புதுச்சேரி ஒன்றியப் பகுதியின் ஆட்சி மொழிகள் ஐந்து என்றும், அவை ஆங்கிலம், பிரஞ்சு, தமிழ், மலையாளம், தெலுங்கு மொழிகள் என்றும் ஒரே பல்லவியை எல்லாரும் கண்ணை மூடிக்கொண்டு கிளிப்பிள்ளையைப் போல் பாடி வருகிறார்கள்.

'புதுவையில் ஐந்து மொழிகள் ஆட்சி மொழிகளாக இருப்பதால் தமிழை ஆட்சி மொழியாக அறிவிப்பது கடினம்!' என்று புதுவை முதல்வரே பேசியதாகத் தினத்தந்தியில் 4–11–96 அன்று செய்தி வந்திருக்கிறது. அண்மையில், புதுவைக்கு மாநிலத் தகுதி தரவேண்டும் என்று வற்புறுத்தி நடுவணரசின் உள்துறை அமைச்சர் இந்திரசித்குப்தாவிடம் பேசிய புதுவை நாடாளுமன்ற உறுப்பினர் வி. நாராயணசாமி கூட, இங்கே ஐந்து மொழிகள் ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன! என்று விளக்கியிருக்கிறார்.[3] ஆட்சி மொழிகள் ஐந்து என்பதற்கு எந்த ஆதாரமும் இருப்பதாகத் தெரியவில்லை.

## புதுச்சேரியின் ஆட்சிமொழிச் சட்டம் என்ன சொல்கிறது?

1965 இல் புதுவைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப் பட்டு, 3.4.65 இல் குடியரசு தலைவரின் ஒப்புதலைப் பெற்ற புதுச்சேரியின் ஆட்சிமொழிச் சட்டம், மேற்குறித்த இணைப்பு உடன்படிக்கையில் குறித்துள்ளபடி அதற்கு முன் இருந்த ஆட்சிமொழி குறித்த நிலைமைகளை அடிபட்டுப் போகுமாறு செய்கிறது. புதுவையின் ஆட்சிமொழிச் சட்டம் கூறுவது என்ன?

'புதுச்சேரி ஒன்றியப் பகுதியின் ஆட்சிமொழி தமிழ். மாகி ஏனாம் பகுதிகளில் முறையே மலையாளமும் தெலுங்கும் ஆட்சி மொழிகளாகப் பயன்படுத்தப்படலாம், இதற்குத் தடையாகாத வகையில் இச்சட்டம் நடை முறைக்கு வரும் காலமுதல் ஆங்கிலம் பயன்படுத்தப் படலாம்'[4] என்பதே.



இச்சட்டம் ஒன்றியப்பகுதி முழுவதிலும் ஆட்சி மொழியாகத் தமிழ்மொழி பயன்படுத்தப்படும் (Shall be used) என்றும், சில பகுதிகளில் மட்டும் மலையாளமும் தெலுங்கும் பன்படுத்தப்படலாம் (may be used) என்றும் குறிப்பிடுவதால், மாகி, ஏனாம் உட்பட ஒன்றியப்பகுதி முழுமைக்கும் தமிழே ஆட்சிமொழி என்ற கருத்தைத் தெளிவாகத் தெரிவிக்கிறது. தேவைப்பட்டபோது, ஆளுநரின் அறிவிக்கை வழி ஆங்கிலம் பயன்படுத்தப் படலாம் (may be used) என்று உள்ளதே தவிர, எப்போதும் ஆட்சிமொழியாக ஆங்கிலமே இருக்கும் என்ற சொல்ல வில்லை. தமிழைப் போன்று அது முழுவுரிமை பெற்ற ஆட்சிமொழி என்று கூறப்படவில்லை.

ஒரு மொழி இருந்த இடத்தில் மற்றொரு மொழி ஒரே நாளில் ஆட்சிமொழியாகிவிட முடியாது. படிப் படியாகப் புதிய மொழி ஆட்சிமொழியாகும் வரையில் ஏற்கெனவே இந்திய ஆட்சியாளர்களால் பயன்படுத்தப் பட்ட ஆங்கிலத்தின் துணை தேவைப்படலாம். அதற்காகவே சட்டத்தில் ஆங்கிலத்துக்கு இடமளிக்கப்பட்டி ருக்கிறது. ஆனால் ஆங்கிலத்திலன்றி வேறு மொழியில் அலுவல் செய்து பழகாத ஆட்சியாளர்களுக்கு இது ஒரு தலைக்கீடாக [சாக்காக]ப் போய் விட்டது. 'சட்டம் ஆங்கிலத்தை ஆட்சிமொழியாக ஏற்றுக் கொண்டிருக் கிறது' என்று சொல்லி அவர்கள் தமிழ், மலையாளம், தெலுங்கு மொழிகளை ஆட்சிக் கட்டிலின் பக்கம் அண்ட விடாமல் செய்து வருகிறார்கள்.

சட்டத்தில் கண்டுள்ள மலையாளம் தெலுங்கு மொழிகளின் பயன்பாடு குறித்தும் ஒரு தெளிவு வேண்டும்.

சுவிட்சர்லாந்து நாட்டில் செருமன், பிரஞ்சு, இத்தாலி ஆகிய மூன்றும் சமமான தகுதி பெற்ற ஆட்சி மொழிகள்.[5] கனடாவில் ஆங்கிலமும் பிரஞ்சும் ஆட்சி மொழிகள்.[6] மலேசியாவில் மலாய், சீனம், ஆகிய இரண்டும் ஆட்சி மொழிகள்.[7] இவ்வாறே யூகோசுலாவியா, சிங்கப்பூர், சிறீலங்கா முதலிய நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் சமமான தகுதி பெற்ற, நாடெங்கும் பயன்படுத்தக் கூடிய ஆட்சி மொழிகளாக உள்ளன. ஆனால் புதுச்சேரி ஒன்றியப் பகுதியின் நிலைமை அப்படியில்லை. புதுச்சேரி, காரைக்கால் ஆகிய தமிழ்ப் பகுதிகளில் 93.35% மக்களும், மலையாளப் பகுதியாகிய மாகியில் 4.14% மக்களும், தெலுங்குப் பகுதியாகிய ஏனாமில் 2.51% மக்களும் வாழ்கின்றனர். இம்மூன்று பகுதிகளும் மூன்று வெவ்வேறு மொழிகளைப் பேசும் மொழிகளாகக் கொண்டவையாகவும், பல நூறு கிலோ மீட்டர்த்தொலைவுகளில் அமைந்துள்ளவையாகவும் உள்ளன. ஒன்றியத்தின் மொத்த மக்கள் தொகையில் 89.29% தமிழ் பேசுவோராகவும், 5.45% மலையாளம் பேசுவோராகவும், 3.70 % தெலுங்கு பேசுவோராகவும், 1.56% உருது, இந்தி, வங்காளம், கன்னடம், குசராத்தி முதலிய ஏனைய மொழிகளைப் பேசுவோராகவும் உள்ளனர்.[8] இவர்களில் தமிழர்களே மிகப் பெரும்பான்மையோராக உள்ளதால் அவர்களின் மொழியை ஒன்றியத்தின் ஆட்சி மொழியாகவும் மலையாளம் தெலுங்கு மொழிகளை ஆட்சி மொழியின் இடத்தில் சில இடங்களில் மட்டும் பயன்படுத்தலாம் என்றும் அறிவித்தது முறையானதேயாகும்.

## ஆட்சி மொழிச் சட்டத்தை நடைமுறைப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் :

புதுச்சேரியில் ஆட்சி மொழிச் சட்டம் வந்த பிறகு



அவ்வப்போது இருந்த துணைநிலை ஆளுநர்கள் ஆட்சி மொழிகளை அவ்வப் பகுதிகளில் பொது மக்களுடனான தொடர்புகளில் பயன்படுத்த வேண்டும் என்று 1–7–66, 16–8–70, 1–10–71, 13–4–72 ஆகிய நாள்களில் அறிவிக்கைகள் பற்பல அரசு துறைகளுக்கும் பிறப்பித்து வந்தார்கள். பொது மக்களுடனான தொடர்போடு அலுவலகங்களுக்கிடையே யான தொடர்புகளிலும் ஆட்சி மொழிகளைப் பயன்படுத்த வேண்டும் என்று 1–6–77, 1–4–83, 1–5–84, 1–3–86 ஆகிய நாள்களில் அறிவிக்கைகள் வந்தன. இவ்வாறு புதுவையின் அரசு துறைகள் அனைத்திற்கும் அறிவிக்கைகள் அனுப்பப் பட்டுள்ளன. சில துறைகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முறையும் அறிவிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன.[9]

இது தொடர்பான பணிகள் பணியாளர், ஆட்சிச்சீர் திருத்தத் துறையின் பணியாளர் சிறகத்திடம் (Department of Personal and Administrative Reforms - Personal wing) ஒப்படைக்கப்பட்டன. அது முதல் பின்வரும் மிகச்சில பணிகள் மட்டுமே மேற் கொள்ளப்பட்டுள்ளன.

1. பல்வேறு துறைகளுக்கும் உரிய சட்டங்களையும் விதிகளையும் தமிழில் மொழி பெயர்க்கும் பணியினைச் சட்டத்துறை தொடங்கியது.

2. அலுவலகங்களில் தேவைப்படும் தமிழ்த் தட்டச்சுப் பொறிகள், தமிழ் தட்டச்சிடத் தெரிந்த எழுத்தர்கள் குறித்த மடல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

3. தமிழ் நாட்டரசு வெளியிட்டுள்ள ஆட்சி மொழிக்

கலைச்சொல் 'தொகுதியின் படிகள் வாங்கிச் சில அலுவலகங் களுக்குத் தரப்பட்டுள்ளன.

4. தமிழ்மொழியில் போதிய திறன் பெறாத அரசு பணியாளர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் வகுப்புகள் சில காலம் நடத்தப்பட்டன.

5. 1991 தொடக்கத்தில் தமிழ் வளர்ச்சிச் சிறகம் (Tamil Development wing) என்ற அலுவலகம் அமைக்கப்பட்டது. ஆனால் அதில் பணிபுரிய ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவரைத் தனிப்பணி அலுவலர் (Officer on Special Duty) ஆக இரண்டு ஆண்டுக்கு ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தியதோடு சரி. துணையாக ஓர் ஏவலர் (Peon) பதவியிடத்தைக்கூட உருவாக்கவில்லை. எனினும் அலுவலக ஆணைவழி ஆசிரியர் சிலரைப் பெற்று அவ்வலுவலகம் பல பணிகளை மேற்கொண்டது. 'கல்வித் துறைக் கலைச்சொல் தொகுதி' ஒன்றினை அவ்வலுவலகம் உருவாக்கிப் பள்ளி களுக்கு அனுப்பியது. அதில் பணியாற்றிய தனிப்பணி அலுவலர்க்கு ஓராண்டு முழுவதும் ஒரு ரூபாய்ச் சம்பளம் கூடத் தரப்படவில்லை. இதுபற்றி யாரும் கவலைப்படவுமில்லை!

ஆட்சி மொழிச் சட்டம் இயற்றப்பட்டு 31 ஆண்டுகள் ஆகியும் இதுவரையில் செயல்வடிவில் 10 விழுக்காடு கூட வரவில்லை.

## இதில் உள்ள உளவியற் சிக்கல்கள்

1. இந்தியர்களை மனப்பான்மையால் ஆங்கிலேயர்களாக ஆக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மெக்காலேயினால் வகுக்கப்பட்ட ஆங்கில அடிமைக் கல்வி



முறையே இன்றும் நம் கல்வி முறைக்கு அடிப்படையாய் உள்ளது. அதைப் பெற்று வளர்ந்த இந்திய மக்கள் ஆங்கிலமே நாகரிக மக்களின் மொழி என்ற மயக்கத்தில் ஊறிக்கிடக்கிறார்கள்.

2. ஆங்கிலமே ஆளத் தகுதிபெற்ற மொழி என்றும், அதில் வல்லமை பெற்றவர்களாலேயே ஆட்சி செய்ய முடியும் என்றும் மக்கள் நம்புகிறார்கள். அதனால் தான் தம் பிள்ளைகளை மழலைப் பருவத்திலிருந்தே ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்புகிறார்கள். ஆங்கிலேயர்களாகவே வளர்க்கப் படும் அவர்களுக்குத் தாய்மொழிப் பற்று உண்டாக வழியில்லை.

3. ஆங்கிலேயர்களின் ஆட்சியைப் போராடி அகற்றிய ஈக மறவர்கள் (தியாகிகள்) கூடத் தாம் ஆங்கில மொழிக்கு அடிமை செய்வதையே பெருமையாக நினைக் கிறார்கள். அவர்களிற் பலர் தம் பெயர் முன் ஆங்கிலத் தலைப்பெழுத்துகளை இடுகிறார்கள்; ஆங்கிலத்திலேயே கையொப்பமிடுகிறார்கள். தமிழில் பேசும்போதும் எழுதும்போதும் சற்றும் கூச்சமின்றி ஆங்கிலத்தைக் கலந்து விடுகின்றனர்.

இவ்வாறு படித்தவர்களிலிருந்து படியாதவர் வரை இந்தியர் அனைவரும் ஆங்கில அடிமைத்தனத்தில் ஊறிப் போய்க் கிடக்கின்றனர்.

## குமுகாயச் சிக்கல் :

1. ஆங்கிலத்தில் நல்ல புலமை பெற்றவருக்குத் தான் அரசு பணி கிடைக்கும் என்ற நிலை உள்ளது. அதனால் தம் மக்களை நன்கு வாழவைக்க விரும்பும் பெற்றோர்கள், ஆங்கில வழிப் பள்ளிகளில் அவர்களைச் சேர்க்கின்றனர். வாழத் துடிக்கும் இளைஞர்களும் ஆங்கிலத்தை நன்கு கற்று அரசு வேலை பெறுவதிலேயே குறியாக இருப்பதில் வியப்பில்லை.

2. மருத்துவம், பொறியியல், வேளாண்மை முதலிய உயர் கல்விகளைப் பெறுவதற்கும் போட்டித் தேர்வுகளில் ஆங்கில வல்லமை மதிப்பிடப்படுகிறது. எனவே ஆங்கிலத்துக் குள்ள செல்வாக்குச் சிறிதும் குறைய வழியில்லை.

3. எப்படியாவது வாழ வேண்டும் என்ற நிலை இருப்பதால் தாய்மொழியைப் பற்றி யாரும் கவலைப் படுவதில்லை. ஆட்சிமொழியைப் பற்றி நினைப்பதற்கும் மக்களுக்கு நேரமில்லை.

4. ஆட்சி மொழிக் கோரிக்கை மக்களிடமிருந்து வலிவான முறையில் வரவில்லை.

**அரசியற் சிக்கல்கள் :**

1. சில அரசியல் கட்சிகளின் மொழிக் கொள்கை தாய்மொழி வளர்ச்சிக்கு ஆதரவானதாக இல்லை. ஒரு மொழிக்கொள்கை, இருமொழிக்கொள்கை, மும்மொழிக் கொள்கை எனப் பல்வேறு கொள்கையை உடைய பல்வேறு கட்சிகள் நாட்டை மாறி மாறி ஆள்கின்றன. அதனால் மொழி, கல்வி ஆகிய துறைகளில் அவரவர் ஆட்சிக் காலத்தில் அவரவர் விரும்பியதைச் செய்கிறார்கள். புதுச்சேரியில் 1991 இல் ஆண்ட கட்சியால் தொடங்கப்பட்ட தமிழ் வளர்ச்சிச் சிறகத்தை அடுத்துவந்த அரசு மூடிவிட்டதையும், மீண்டும் 1996 இல் ஆட்சிக்கு வந்த அரசு அதைத் திறக்க முயல்வதையும் இதற்குச் சான்றாகக் கூறலாம்.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களில் ஆங்கிலம் மிகுதியாகப் படித்தவராக உள்ளவர்களையே அமைச்சர் பதவிக்குத் தகுந்தவராகக் கருதும் நிலை உள்ளது. ஆங்கிலம் தெரிந்த தமக்குத் தரப்பட்ட மதிப்பைத் தம்



தாய்மொழியை ஆட்சிமொழி யாக்குவதால் குறைத்துக் கொள்ள அவர்கள் விரும்புவதில்லை.

3. ஆங்கிலம் தெரியாதவர் அமைச்சராக நேர்ந்தாலும் தமக்கு ஆங்கிலம் தெரியாது என்பதை வெளியில் காட்டிக் கொள்ள அவர் விரும்புவதில்லை. ஆங்கிலம் தெரிந்த அலுவலர்கள் சொல்வது எதுவாயிருந்தாலும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

4. மொழிப்பற்றுள்ளவர்களும், மொழி இலக்கிய அமைப்புகளும் வற்புறுத்துவதால் அரசியலார் பலர் மொழிக்கு ஆக்கமான செயல்களைச் செய்ய முன் வருகின்றனர். இயல்பாகவே அவர்களுக்கு மொழிப் பற்றில்லாமையால் பல பணிகள் தொடர்ந்து கவனிக் கப்படாமல் தீர்மானம், அரசாணை, சட்டம் என்ற அளவிலேயே செயற்படாமல் கிடக்கின்றன. 1977 இல் புதுவை அரசு பிறப்பித்த பெயர்ப்பலகை ஆணையை [10] அரசே மீறி அலுவலகங்களில் பெயர்ப் பலகை வைத்துள்ளதையும், 1980இல் புதுச்சேரி என்ற பெயருக்காகப் புதுவைச் சட்டமன்றம் நிறைவேற்றிச் சட்டமாக்கத் தில்லிக்கு அனுப்பிய தீர்மானத்தை [11] அதைச் செய்த சட்டமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களுமே மீறிப் பாண்டிச்சேரி என்று வழங்கி வருவதையும் இதற்குச் சான்றுகளாகக் காட்டலாம்.

5. ஆட்சி மொழியே சற்றும் அறியாத உயர் அலுவலர்கள் ஆட்சியாளர்களாக அமர்த்தப்படுவதால் ஆட்சி மொழி வளர்ச்சியைப் பற்றி அவர்கள் நினைத்துப் பார்க்கவும் முன் வருவதில்லை. அவர்களுக்குக் கோப்பு அனுப்பும் துணை அலுவலர்கள் தமிழில் எழுத விருப்பம் இருந்தாலும், எழுதும் திறன் இருந்தாலும் தயங்குகிறார்கள்.

6. பிழையாக இருந்தாலும் ஆங்கிலத்தில் எழுதிப் பணி செய்வதே எழுத்தர் பலர்க்கு எளிதாக உள்ளது. தமிழில் வரைவு,

கோப்புகளை எழுதுவதில் அவர்களுக்குப் பயிற்சியும் இல்லை. அதில் முயன்று மேல் அலுவலர்களின் வெறுப்புக்கு ஆளாக அவர்கள் விரும்புவதும் இல்லை.

7. ஆங்கில மேட்டிமைத்தனத்தை வளர்ப்பதில் ஆங்கில வழித்தனியார் கல்வி நிறுவனங்கள், தனியார் தொலைக்காட்சிகள், புதுக்கவிதைகள், சிறுகதை எழுத்தாளர் சிலரின் பொறுப்பற்ற எழுத்துகள் முதலியவற்றுக்கும் பங்கு உண்டு.

இவையாவும் ஆட்சி மொழிச்சட்டம் நடைமுறைக்கு வரத்தடையாய் உள்ளன. புதுவையில் உள்ள பல மொழி இலக்கிய அமைப்புகள் நீண்ட காலமாக ஆட்சி மொழிச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று போராடி வருகின்றன. அவற்றில் 1993 இல் அமைக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி நடவடிக்கைக் குழுவின் போராட்டங்கள் குறிப்பிடத் தக்கவை.[12] 1994 இல் அக்குழு, தலைமைச் செயலகத்தின் முன் ஒரு மறியற் போராட்டத்தை நடத்தியது. 'ஆட்சி மொழியில் ஆட்சி செய்யத் தெரியாத அரசு அலுவலர்கள் தலைமைச் செயலகத்தில் நுழைய வேண்டாம்' என்று முழக்கமிட்டு அதன் நுழைவாயிலில் அதன் தொண்டர்கள் மறியல் செய்தனர். அதனால் அவர்கள் காவல் துறையினரால் சிறை செய்யப்பட்டனர். எனினும், இப்படி ஒரு நிலை இருப்பதாக மக்கள் அறிந்து கொள்ள அப்போராட்டம் பயன்பட்டதே யொழிய, அரசு அலுவலர்களையோ அமைச்சர் பெருமக்களையோ அப்போராட்டம் சிறிதும் அசைத்ததாகத் தெரியவில்லை.

### தீர்வுகள்

மேற்குறித்த நிலைமைக்கும் சிக்கல்களுக்கும் தீர்வாகப் பின்வரும் செயற்பாடுகள் குறிக்கப் பெறுகின்றன :



1. புதுச்சேரிக்கு அமர்த்தப்பெறும் துணைநிலை ஆளுநர் தமிழ் படித்தவராய் இருத்தல் வேண்டும். அப்போது தான் அவர் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள முடியும். தமிழை ஆட்சி மொழியாக்குவதில் அக்கறை காட்ட முடியும். ஒரு மாநிலத்தில் வேற்று மொழிக்காரரை ஆளுநராக அமர்த்துவதற்குக் காரணம், அவர் மக்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைத்தரக் கூடாது என்ற கொள்கையாக இருக்கலாம். பெரிய தொழிற் சாலை போன்ற நிறுவனங்களில் வாயில் காவலராக மக்கள் மொழி தெரியாத கூர்க்காக்களை அமர்த்துவதில் இக்கொள்கை சரியானதாக இருக்கலாம். ஆனால் ஆளுநர் ஒரு மாநிலத்தின் வாயில் காவலர்கள் அல்லர்.

2. இங்கு ஆட்சிப் பணிக்கு அனுப்பப்பெறும் இ.ஆ.ப., இ.கா.ப. அலுவலர்கள் தமிழ் தெரிந்தவர்களாய் இருத்தல் வேண்டும். இங்கு வந்த பிறகும் அவர்கள் தம் தமிழறிவைத் தேர்வுகளின் வழி உறுதிப்படுத்த வேண்டும்.

3. தமிழறிவு பெறாத அத்தகைய அலுவலர்கள் இங்குப் பணிபுரிய நேர்ந்தால், குறிப்பிட்ட காலத்தில் அவர்கள் ஆட்சி மொழியில் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். தவறினால் அவர்கள் இங்கிருந்து மாற்றப்பட வேண்டும்.

4. ஆள் எடுக்கும் தேர்வுகளில் தமிழில் எழுதுதல், தட்டச்சிடுதல் ஆகியவற்றில் திறன் மிகுந்தவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்கேற்றபடி தேர்வுகளும் தமிழில் அமைய வேண்டும். அண்மையில் காவல் துறையில் நடத்தப் பட்ட ஆள் எடுக்கும் தேர்வில் மாகியிலிருந்து வந்தவர்களுக்கு மலையாளத்திலும், ஏனாமிலிருந்து வந்தவர்களுக்குத் தெலுங்கிலும் வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டதாகவும், ஆனால் புதுவை காரைக்கால் பகுதியினர்க்கு ஆங்கிலத்தில்

மட்டும் வினாத்தாள்கள் தரப்பட்டதாகவும் தெரிகிறது! இது எப்படிச் சமவாய்ப்புத் தருவதாகும்?

5. போதிய மொழித்திறன் இல்லாதோர்க்கு அதை வளர்த்துக் கொள்ள உதவும் வகையில் வகுப்புகள் நடத்த வேண்டும். அதன் முடிவில் அடைவுத் தேர்வுகள் நடத்திச் சான்றிதழ் தரவேண்டும். அதைப் பெறாதோர் தக்கபடி ஒறுக்கப் பெறல் வேண்டும். அத்தகைய வகுப்புக்கு வருகை தருதல் கட்டாயமாக்கப் படல் வேண்டும்.

6. எழுத்தாளர்களுக்குத் தமிழில் வரைவுகள் கோப்புகள் எழுதும் பயிற்சியை முறைப்படி அளித்தல் வேண்டும். இப்போதும் பொதுமக்கள் தமிழில் விடுக்கும் வேண்டுகோள்களுக்கும் ஆங்கிலத்தில் விடைதரும் அவல நிலையே உள்ளது.

7. ஆங்கிலத்தில் உள்ள படிவங்கள் சான்றி தழ்கள் பதிவேடுகள் முதலியன தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அச்சிடப்பட வேண்டும்.

8. தமிழில் அச்சிடப்பட்ட படிவங்களை ஆங்கிலத்தில் நிரப்புவோர் கடுமையாகத் தண்டிக்கப்படல் வேண்டும்.

9. ஒவ்வொரு துறைக்குமான கலைச்சொல் தொகுதிகள் வெளியிடப்படல் வேண்டும். அவை ஒவ்வோர் எழுத்தர் கையிலும் தரப்படல் வேண்டும்.

10. மாகி ஏனாம் பகுதிகளில் தமிழும், புதுவை காரைப் பகுதிகளில் மலையாளம் தெலுங்கு மொழிகளும் கற்பிக்க ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

11. ஆட்சி மொழிச் சட்டத்தை நடைமுறைப்படுத் துவதைத் தலைமைச் செயலகத்திலிருந்து தொடங்க வேண்டும்.



12. தமிழில் சிறந்த வரைவுகள் எழுதுவோருக்கு ஊக்கப் பரிசுகள் தர வேண்டும்.

13. ஆங்கில மேட்டிமை மனப்பான்மையை வளர்க்கும் ஆங்கில வழிப்பள்ளிகள் அனைத்தும் தமிழ் வழிப்பள்ளிகளாக ஆக்கப்பட வேண்டும்.

14. தமிழ் நாட்டிலேயே நம் குழந்தைகளை ஆங்கிலேயர்களாக வளர்க்கின்ற ஆங்கிலப் பள்ளிகளில், மழலையர் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில் தமிழ் தவிர வேறு எந்த மொழியும் தலைகாட்டாத வகையில் கல்வி முறை அமைய வேண்டும். இதில் அரசு உறுதியாக இருக்க வேண்டும். இதற்கு மறுக்கும் தனியார் பள்ளிகளின் உரிமங்கள் பறிக்கப்படல் வேண்டும்.

15. தமிழ் வழியில் கல்வியளிக்கப்பட்ட இளைஞர்கள் அலுவலகங்களில் ஆங்கிலத்தில் பணிபுரியும் நிலை இருக்கக் கூடாது.

16. ஆங்கிலம் படித்தவரா என்று பார்க்காமல் தமிழில் நல்ல பற்றும் திறனும் உள்ளவரா என்று பார்த்தே அமைச்சர்கள் தெரிவு செய்யப் பெறல் வேண்டும். அவர் தமக்கு ஆங்கிலத்தில் வரும் கோப்புகளைத் திருப்பியனுப்பும் அளவுக்கு உறுதியுடைய வராயிருக்க வேண்டும். கோப்புகள் அனைத்தையும் தமிழில் எழுதுமாறு வற்புறுத்த வேண்டும்.

17. அரசு பணியாளர்களுக்குத் தாய்மொழிப் பற்றை அரும்பச் செய்யும் வகையில் அவர்கள் தமிழில் கையெழுத் திடுவதைக் கட்டாயமாக்க வேண்டும்.

18. தமிழ் தெரியாத மாகி ஏனாம் பகுதி அரசு பணியாளர்களைப் புதுவை காரைக்கால் பகுதிகளுக்கு மாற்றக்

கூடாது. மலையாளம் தெலுங்கு தெரியாத பணியாளர்களை முறையே மாகி, ஏனாம் பகுதிகளுக்கு மாற்றக்கூடாது.

19. ஆட்சிமொழி வளர்ச்சி தொடர்பான எல்லாப் பணிகளையும் மேற்கொள்ளும் தமிழ் வளர்ச்சித் துறை ஒன்று ஓர் இயக்குநர் தலைமையில் இயங்குமாறு உருவாக்கப்படல் வேண்டும். காரைக்கால் மாகி, ஏனாம் பகுதிகளில் அதன் கிளை அலுவலகங்கள் அமைய வேண்டும். இந்நிறுவனப் பொறுப்பாளர்கள் அலுவலகங் களுக்குச் சென்று ஆய்வு செய்து மேலிடத்துக்கு அறிக்கைகள் அனுப்ப வேண்டும்.

20. ஆட்சிமொழிகளில் செய்யக் கூடிய அரசு பணிகளைப் போதிய காரணம் இல்லாமல் ஆங்கிலத்தில் செய்யக் கூடாது. அப்படிச் செய்வோர் தண்டிக்கப் படவேண்டும்.

21. தமக்கென்று ஒரு மொழி இல்லாதவர்கள் போல், எல்லாவற்றையும் ஆங்கிலத்தில் செய்வது மானக்கேடு என்ற உணர்வை அனைவர் உள்ளத்திலும் வளர்க்க வேண்டும்.

22. தமிழ் வழியில் படித்தவர்களுக்கு உயர்கல்வி யிலும், வேலை வாய்ப்பிலும் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

மேற்கண்ட தீர்வுகள் மக்கள், அரசு ஆகிய இரு திறத்தாராலும் இயலக் கூடியன. அவற்றை மொழி, இலக்கிய குமுகாயத் தொண்டு நிறுவனங்கள் பலவகையாலும் வற்புறுத்திக் கொண்டிருக்க வேண்டும். தேவைப்பட்டால் தெருவில் இறங்கிப் போராட வேண்டும்; சிறை செல்லவும் முன் வரவேண்டும். மக்களிடம் தாய்மொழிப்பற்று, தாய்மொழி வழிக்கல்வியில் விருப்பம், மொழி மானம் இனமானம் காத்தல் ஆகியன குறித்துத் தொடர்ந்து பரப்புரைகள் செய்து வரவேண்டும். நூற்றாண்டுக் கணக்காக நம்மவர் குருதியில்



ஊறிப்போன ஆங்கில அடிமைத்தனம் என்ற குறுதிப்புற்று நோயை உடனடியாகவோ, வெறும் பேருரைகள், பட்டிமன்றங்கள், பாட்டரங்குகள், வழக்காடு மன்றங்கள், மாநாடுகள், தீர்மானங்கள் வழியாகவோ நீக்க இயலாது. ஒருங்கிணைந்த திட்டமிட்ட, உறுதியான நடவடிக்கைகளும், பொறையுடை மையும் மொழிப் போராட்ட மறவர்களுக்கு மிகுதியும் தேவை.

## அடிக் குறிப்புகள்

1. முனைவர் மலையமான், ஆட்சி மொழிச் சிக்கல்களும் தீர்வுகளும், அன்புப் பதிப்பகம், சென்னை–18, ப.45.

2. The french language shall remain the official language of the establishments so long as the elected representative of the people shall not decide otherwise (Art. 28, Gazetteer, Pondicherry, vol 1. P. 911).

3. "புதுவைப் பகுதியில் மொழிப் பிரச்சினை எதுவும் இல்லை. ஐந்து மொழிகள் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சி மொழியாக உள்ளன என்பதையும் நீதி ஆதாரம் பற்றியும் கூறினேன்" [நாடாளுமன்ற உறுப்பினர் வி. நாராயணசாமி, தினத்தந்தி 16.9.96.]

4. Official language of the Union territory :

The Tamil language shall be the language to be used for all or any of the official purposes of the Union Territory ... in the case of Mahe area, the Malayalam language and in the case of Yenam area, the Telugu language may be used for such official purposes.

Not Withstanding anything contained in section 3, as from the commencement of the Act, the English language may be used for all or any of the official purposes of the Union Territory.

5. தமிழ் ஆட்சி மொழிச் சிக்கல்களும் தீர்வுகளும், முனைவர் மலையமான் ப.25.

6. கனடாவில் 67% ஆங்கிலம், 19% பிரஞ்சு பேசுகின்றனர். இரண்டும் ஆட்சி மொழிகள். எதில் எழுதினாலும் அரசிடமிருந்து அம்மொழியில் பதில் வருகிறது. [மேற்படி நூல் ப. 35]

7. மேலது ப. 47.

8. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கை — 1991.

9. Notification issued, Pondicherry official lang. Act - 1965.

10. G.o. (MS) No 163/77 Lab, dated 24 October 1977, 24 - A-Exbition of the name board.

11. 'இந்த யூனியன் ஆட்சிப் பரப்பின் பெயர் பாண்டிச்சேரி என்றிருப்பதைப் புதுச்சேரி என்று மாற்றுவதற்கான சட்டம் இயற்றுமாறு இந்திய அரசை இச்சட்டப் பேரவை கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கிறது' [புதுவைச்சட்டப் பேரவை நடிவடிக்கை 15–10–1980]

12. புதுவைத்தமிழ் வளர்ச்சி நடவடிக்கைக்குழு



ஆட்சிமொழிச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அரசை வற்புறுத்தி நடத்திய போராட்டங்கள் :

1. தமிழறிஞர்களின் கோரிக்கைப் பேரணி [15.7.93]
2. கருப்புக்கொடி வேள்வி [23.3.94]
3. தலைமைச் செயலக வாயிலில் மறியல் [24.8.94]
4. அஞ்சலட்டைப் போர் 1994
5. மாநிலம் முழுவதும் நடைப்பயணம் 3.5.95, 24.5.95, 30.5.95, 11.6.95, 17.7.95
6. தேர்தல் குறித்த மூடுந்துப் பரப்புரை

5–11–96 இல் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனக் கருத்தரங்கில் வழங்கிய கட்டுரை.

## இந்நூலாசிரியர்...

★ தமிழில் இதுவரை எழுதப்படாத 'சிந்துப் பாடல்களின் யாப்பிலக்கணத்தை' முதன் முதலாக உருவாக்கியவர்.

★ புதுவைத் தமிழ் வளர்ச்சி நடவடிக்கைக் குழுவின் சிறப்புத் தலைவராக இருந்து, தமிழ் வளர்ச்சிக்காகப் புதுவைப் பகுதி முழுவதும் நடைப் பயணம் சென்று மக்களுக்குத் தமிழ் உணர்வை ஊட்டி, அரசு தமிழ் வளர்ச்சிக்கான பல பணிகளை மேற்கொள்ளவும், அரசாணைகளைப் பிறப்பிக்கவும் காரணமாக இருந்து வருபவர்.

★ இசைத்தமிழ் நாடகத்தமிழ்த்துறைகளில் நிகழ்முறை விளக்கத்துடன் பாடி விளக்கித் தமிழ் கூறு நல்லுலகமெங்கும் இசைப் பொழிவாற்றி வருபவர்.

★ தமிழ் குறித்த தம் வினைப்பாடுகளையும். விளைவு களையும், 'என் தமிழ் இயக்கம்' என்ற பெயரில் இரண்டாண்டுக்கு ஒருமுறை நூலாக்கி வருபவர். இவ்வகையில் இதுவரை 5 தொகுதிகள் வெளிவந்துள்ளன.

★ பலவகை இசைத்தமிழ்ப் பாடல்களுக்கும் இன்று இல்லாத முழுமையான 'இசைத்தமிழ் இலக்கணம்' ஒன்றினைப் படைப்பதைத் தம் வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டு உழைத்து வருபவர்.



★ தமிழ் நாட்டரசின் புதிய தமிழிலக்கண உருவாக்க வல்லுநர் குழுவின் உறுப்பினர்.

★ சென்னைப் பல்கலைக்கழக இசைத்துறைப் பாடத் திட்டக்குழு உறுப்பினர்.

★ புதுவை அரசின் ஆட்சிமொழிச்சட்டம் நடைமுறைப் படுத்துதல் ஆய்வுக்குழுவின் உறுப்பினர்.

★ 'தெளி தமிழ்' என்னும் தமிழ் வளர்ச்சித் திங்கள் இதழின் ஆசிரியர்.

★ புதுவைத் தமிழ் வளர்ச்சி நடவடிக்கைக் குழுவின் சிறப்புத் தலைவர்.

## இந்நூலாசிரியரின் படைப்புகள்

| வரிசை எண் | நூல்கள் | வெளியான ஆண்டு |
|---|---|---|
| | **இலக்கணம், மொழி வளர்ச்சி** | |
| 1. | நூறு சொல்வதெழுதல்கள் | 1957 |
| 2. | இனிக்கும் இலக்கணம் | 1981 |
| 3. | கம்பன் பாடிய வண்ணங்கள் | 1987 |
| 4. | இலக்கண எண்ணங்கள் | 1990 |
| 5. | பாவேந்தர் வழி பாரதி வழியா? | " |
| 6. | என் தமிழ் இயக்கம் –1 | " |
| 7. | சிந்து இலக்கியம் | 1991 |
| 8. | என் தமிழ் இயக்கம் – 2 | 1992 |
| 9. | தாய்க்கொலை | 1992 |
| 10. | சிந்துப் பாடல்களின் யாப்பிலக்கணம் | 1993 |

11. சிந்துப் பாவியல் 1994
12. என் தமிழ் இயக்கம் – 3 "
13. மொழிப் பார்வைகள் 1995
14. என் தமிழ் இயக்கம் – 4 1996
15. பாவலர் பண்ணை 1997
16. என் தமிழ் இயக்கம் – 5 1998
17. எருமைத் தமிழர்கள் 1998
18. மொழிப் புலங்கள் 1999

**இலக்கியம்**

19. இலக்கிய எண்ணங்கள் 1988
20. புகார் முத்தம் 1991
21. கற்பு வழிபாடு 1994

**பாடல்**

22. ஓட்டைப் புல்லாங்குழல் 1990
23. கம்பனுக்குப் பாட்டோலை "
24. பன்னீர் மழை 1991
25. வள்ளுவர் வலிமிக்கதாகக் கருதுவது அருளையா? பொருளையா? 1999

**இசை**

26. பாவேந்தரின் இசைத் தமிழ் 1990
27. இசுலாம் வளர்த்த இசைத்தமிழ் 1996
28. ஏழிசை எண்ணங்கள் 1998
29. சிலப்பதிகாரம் – தமிழன் படைத்த கலைக்கருவூலம் 2000

**வரலாறு**

30. புதுச்சேரி 'பாண்டிச்சேரி'யுடன் போராடுகிறது! 1994

பொள்ளாச்சி நசன்
அ.கு.எண் : 642 006.
Web : http//:www.thamizham.net

# முனைவர் இரா. திருமுருகன்

| | |
|---|---|
| முகவரி | : 'எழிசைச்சூழல்' 62, மறைமலை அடிகள் சாலை, புதுச்சேரி – 605 001. பேசி : 0413 – 201191. |
| மின்னஞ்சல் முகவரி | : irathirumurugan @ yahoo. co.in |
| பிறப்பு | : 16.3.1929, கூனிச்சம்பட்டு, புதுவை. |
| கல்வித்தகுதி | : முனைவர் (Ph.D) பொருள் : சிந்துப் பாடல்ளின் யாப்பிலக்கணம், கருநாடக இசை, மொழியியல் சான்றிதழ்கள், பிரஞ்சு மொழிப் பட்டயம் [D.L.F.Paris], கல்விமுதுவர் [M.Ed.,] |
| சிறப்புப்பட்டங்கள் | : நல்லாசிரியர் [நடுவணரசு], இலக்கணச் சுடர், இயலிசைச் செம்மல், தமிழ்க் காவலர், சிந்திசைச் செம்மல், மொழிப் போர் மறவர், முத்தமிழ்ச் சான்றோர் முதலியன. |
| நிறுவுநர் | : புதுவைத் தமிழன்பர்கள் தமிழ்ப்பணி அறக்கட்டளை, முனைவர் இரா. திருமுருகன் அறக்கட்டளை, 'தெளிதமிழ்'த் திங்கள் இதழ். |
| பொறுப்புகள் | : தமிழ்நாட்டரசின் தமிழிலக்கண உருவாக்கக் குழுவுறுப்பினர், புதுவைத் தமிழ் வளர்ச்சி நடவடிக்கைக் குழுவின் சிறப்புத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழக இசைத்துறைப் பாடத்திட்டக் குழுவுறுப்பினர், புதுவை அரசின் ஆட்சி மொழிச்சட்ட நடைமுறைப்படுத்தல் ஆய்வுக் குழுவுறுப்பினர், ஆசிரியர் 'தெளிதமிழ்'. |
| வெளியிட்ட நூல்கள் | : இலக்கண ஆய்வு–21, இலக்கிய ஆய்வு–3, இசைத்தமிழ்–4, பாடல்–4, இடப்பெயராய்வு–1, தமிழ்ப் பாடநூல்–17. |
| விருப்பமான புலங்கள் | : தமிழிலக்கணம், இசைத்தமிழ். |